[illegible]
V.3. N026 3 Jul 1930

JL
[illegible]211, N28 KN
N30·3·26
189110.

1251

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 3] 1930 ௵ ஜுலை ௴ 3௳ [No. 26.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 501
2. தேவாரமும் வானநூலும் E. T. சொக்கம்மாள் B. A., L. T. 503
3. மாதவிமாதவம்—பொ. ராமானுஜன் 505
4. நம்மாழ்வார் வைபவம் (10 பத்து—6 பதிகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 507
5. மானத சாத்திரம் (நடத்தை) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 509
6. தமிழ்ப்பாடம் (நைடதம்—நளன் தூதுப்படலம்) 511
7. கம்பராமாயணம் (மந்தரை சூழ்ச்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. 513
8. குறுந்தொகை (பாட்டு 91—95) K. இராமரத்நம் ஐயர் B. A. 516
9. மதிப்புரை (கந்தவனநாதர் நான்மணிமாலை) 517
10. வர்த்தமானம் 517

## கலாநிலயம்

### வண்டிமாடும் மாட்டு வண்டியும்

**1**

சிலநாட்களுக்குமுன் சென்னைப்பட்டினத்திலோர் சனமடர்ந்த வீதிவாய், சக்கரச்சிவிகை எனத்தக்க ரிக்ஷாவண்டியில், பருத்த யாக்கைய னொருவனை வைத்து வியர்வும் வெய்துயிர்ப்புமாய் இழுத்துச் சென்றனன் ஓர் ஆள். போக்குவரவின் நெருக்கத்தால் வழிபெறாது தடைபட்டு மிக வருந்தினன் இவன். இவனுக்குமுன் ஊர்ந்தது ஓர் ஒற்றைமாட்டு வண்டி. அதனாலும் நேராகச் செல்ல இயலவில்லை. ஆதலின், பின்வந்த ரிக்ஷாவண்டிக்காரன் எப்பக்கம் விலகி அம் மாட்டுவண்டியைக் கடக்க முயலினும் அதுவும் அப்பக்கமே மாறி இவனைக் குறுக்கிட்டுக் குறுக்கிட்டு மறிக்கலாயிற்று. இந்த ரிக்ஷா வண்டிக்காரனுக்குப் பெருங் கோபம் வந்தது. மூட்டை வண்டியிழுப்பவனைக்காட்டிலும் மாட்டுவண்டி ஒட்டுபவன் தான் உயர்ந்தவன் என்று எண்ணிக்கொள்கின்றான். மாட்டுவண்டிக்காரனை விடத் தான் உயர்ந்தவனென்பது ஜட்காவண்டிக்காரனது எண்ணம். ஜட்காவண்டிக்காரனை விட உயர்ந்தவனும் ரிக்ஷா இழுப்பவன். இவனைவிடத் தான் உயர்ந்தவன் என்பதில் மோடார் பஸ் ஒட்டுகிறவனுக்கு ஐயமேயில்லை. இவனைவிட இரயிலோட்டுவோனும், இரயிலோட்டுவோனைவிடக் கப்பலோட்டுவோனும், கப்பலோட்டுபவனைவிட ஆகாயவிமானம் செலுத்துவோனும் இப்படியே, தத்தமை உயர்ந்தவர் என மதித்துக் கொள்ளலாகின்றனர். மேன்மேலுயர்ச்சி நிற்க, மூண்டெழுஞ் சினத்தினோடிழைத்த நம் ரிக்ஷாவண்டிக்காரன் என் செய்தான்! தன்னில் தாழ்ந்த வொரு தொழிலாளிபால் தன் முன்னேற்றம் தடைபடத் தரிக்கிலன். "ஏ, மூளைகெட்ட மாட்டுவண்டி, நேரே போடா" என்று உரப்பினன். அவ்வளவில் அம்மாட்டு வண்டிக்காரன், இமைப்பொழுதுந் தாழாது, ஏற்ற சொல் முறையறிந்து எதிர்வழங்கு மாற்றல்மிக்க வழக்காளி நார்ட்டனே முதலானோர் வியந்து நாண, "சீசீ! வண்டிமாடு, நீதான் போடா நேரே" என்று மறுநிந்தனை போக்கினன். ரிக்ஷா இழுத்தவன் வாய் அடைத்தது.

இச்சிறுநாடகம் எத்துணைத் தத்துவங்களைத் தாங்கியிருக்கின்றதென்பதை அதனில் நடித்த பாத்திரங்கள் அறியார். மாநுடவாழ்க்கையில் பலவேறு வகையான முயற்சிகள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு உழைப்பும் ஓர் ஊதியத்தை இலக்காக உடையது. இந்த ஊதியம் தன்னையேகருதித் தேடப்படுவதாயின் அதன்பொருட்டு விவகரிப்போரெல்லாம், மாட்டு வண்டி அல்லாக்கால் வண்டிமாடேயன்றி வேறல்லர். காலால் பிழைத்தாலென், கையால் பிழைத்தாலென், வாயால் பிழைத்தாலென், கற்றவித்தையைக்காட்டிப் பிழைத்தாலென், அந்தத்திலெல்லா மல்லலேயாய் முடிவது தெரிந்தும், ஒருவருக்கொருவர் உயர்ந்து முன்னேற்றமடைவதாக வீணெண்ணங் கொண்டு வாழ்க்கையைக் குழப்பிவைத்தலால் ஏது பயன். "வாழ்நாளெல்லாம் உழைத்துழைத்துப் பாழாவானேன்" என்று டென்னிஸன் (Tennyson), மாத்யூ ஆர்னல்ட் (Mathew Arnold) அனைய ஆங்கில அறிஞர்கள் பெரிதும் பரிகின்றனர். முன்சொன்ன

டென்னிஸன் என்பவர் ஊன்றிய கேள்வியொன்று கேட்கின்றார்:—

Why are we weigh'd
upon with heaviness,
And utterly consumed
with sharp distress,
While all things else
have rest from weariness?
All things have rest:
Why should we toil alone,
We only toil, who are
the first of things,
And make
perpetual moan,
Still from one sorrow
to another thrown:
Nor ever fold
our wings.
And cease from
wanderings,
Nor steep our brows in
slumber's holy balm,
Nor hearken what the
inner spirit sings,
There is no joy but calm!
Why should we only toil,
the roof and crown of things?

[மனிதனைத் தவிர மற்றவைகளுக்கெல்லாம் அமைதி வாய்த்திருக்க நாம் மாத்திரம் ஏனோ, சுமையினு லழுந்தி யழுந்திப் பின்னர்க் கூரிய துன்பத்திற் கிரையாகி அறவே தொலைந்துவிடவேண்டும். எல்லாப் பொருள்களுக்கும் ஓய்வும் அமைதியும் இருக்கின்றன. நாம் மாத்திரம் உழைப்பானேன்! பொருள்களுக்கெல்லாம் முதலாகிய நாமே ஒரு துன்பத்தினின்று மற்றொரு துன்பத்துள் எந்நாளும் எறிபட்டு இடைவிடா மறுக்கமுற்றோலமிட்ட வண்ணமாய் உழைக்கின்றோம். சிறகைக் குவித்து நாம் அலையாது ஒரு போதும் ஓய்வதில்லை. துயிலெனுந் தூய தைலத்தில் நமது நயனங்களைத் தோய்ப்பதில்லை. ''சாந்தியே யல்லால் வேறோர் சுகமில்லை'' யென்னும் நம் உள்ளுணர்வின் இன்னிசைக்குச் செவிகொடுப்பதும் இல்லை. படைப்புப் பொருள்களுக்கெல்லாம் முகடும் முடியுமாய நாம் மாத்திரம் ஏனோ உழைத்துழைத்து வருந்தவேண்டும்!—என்பது இவ்வாங்கிலச் செய்யுளின் பொருள்.]

இந்தியப் பெரியோர் வைகலும் வழங்குமாசியாய்ச் சாந்தி சாந்தி சாந்தி என மும்முறை உரைப்பதன் மேன்மையை, "சாந்தியே யல்லால் வேறோர் சுகமில்லை யில்லை" என இயம்பினன் டென்னிஸன். உழைப்பனவனைத்தும், மாட்டுவண்டி வண்டிமா டாவதன்றிச் சுகமெனும் அந்நன்னிலைபெற்று உய்யும் நெறியன்று. ஒரு துன்பத்தினின்று மற்றொரு துன்பத்துள் எறிபடும் கொள்கையேயது. இயற்கைப்பொருள் நிலையையும் மனிதவாழ்க்கைமுறையையும் சீர்தூக்கிப் பார்க்கின்றார் அக்கவி. சிருஷ்டியின் சிகரம்போன்றவர் மனிதர்; எனினும் மற்றவைகளுக் கியற்கையாயிருக்கும் அமைதி, இம்மனிதர்க்கு இல்லாதுபோனது இரங்கற்பாலதே. முழுமுதற்கடவுளால் படைக்கப் பெற்ற எல்லாப்பொருள்களுக்கும் உயர்ந்தவர் மனிதர் என்பது என்! தம்மைப் படைத்த அம் முழுமுதற் கடவுளினும் மானுடரே ஒருவிதத்தில் உயர்ந்தவர் என்னல் வேண்டும். வழிபடற்கு ஒரு கடவுளை யுடைய பாக்கியம் வாய்ந்தவரா யிருக்கின்றோம் நாம். வழிபட வொருகடவுள் அம் முழுமுதற் கடவுளிற் கில்லையே.

இக்காலம் நடைபெறுகின்ற இயக்கங்களெல்லாம் கடவுளை வழிபட்டெய்தும் அமைதிக்கு இடையூறாயிருக்கின்றனவே அல்லாமல் அவைகளாற் கண்ட பயன் யாது மில்லையென்பது ஆழ்ந்துநோக்குவோர்க்குப் புலப்படாமல் இராது. மாட்டுவண்டியை வண்டி மாடாக மாற்றிவைப்பதால் பெரிதும் சாதித்துவிட்டதாகக் கருதி மதிமோசம் போவார்தம் நிலைமையை என்னென்று இயம்புவோம். சாந்தியுடன் கூடிய சாச்வதநிலையை எய்துவதொன்றே நோக்கமாகக் கொள்ளாமல், சுழற்சியின் வேகத்தைச் சுற்றிவிடுவதால், துன்பத்தினளவும் வகைகளும் எவ்வளவு விரைவில்பெருகுகின்றனவென்பதைக்கண்டிருந்தும், நமது முறைகளைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்னு மதி வராதிருப்பது யாருடைய விதியோ அறிகிலேம். ஆசையு மல்லலு மில்லாமல் அமைதியுடன் வாழ்கின்ற வாழ்க்கையின் மேன்மையை உரைப்போர் இந்நாள் அரிதாகிவிட்டனர். ஒருவர் இருவர் அமைதியின் மேன்மையைஉரைக்கவாலாமாயினும் இதனிற்கு மாறான மற்ற முயற்சிகளை ஒழித்துவிடும்படி அவர் வற்புறுத்தக் கண்டிலம். மனதற்ற பரிசுத்தநிலையை எய்தி இவ்வமைதியை யுடையவராதல் எளியதன்று. தாயுமானவரே முதலானோர்இம்முயற்சியில் தளர்ந்து சோர்ந்தனர். பண்டைக்காலத்தில் இம்முயற்சிக் குதவியாகயோகம் முதலியசாதனங்களைப் பயின்றார். இக்காலத்தில், அமைதியை நாடும்படி உபதேசிப்பவர்களும், அது கைகூடுவதற்குரிய சாதனங்கள் யாதும் பகராமல், "எம்பெருமா னிணையடிகளே பற்றுக் கோடாகச் சாச்வதமாகிய சாந்தநிலையை அடையுங்கள்" என்று விதிப்பதோடு நின்று விடுகிறார்கள். பெரும்பாலும் இவ்வுபதேசம் செய்பவர்களே அமைதியென்பதை அணுவளவும் கண்டவரல்லரென்பதற்குச் சமயக் கூட்டங்களில் நிகழ்கின்ற வழக்கும் வன்சொற்களும் தக்க சான்றாகும். பக்தியும் அமைதியும், பகர்வதால் வந்துவிடுமெனின் பிறகு, பாவமேது அல்லலேது, இவ்வுலகில் வேறோர் குறையேது. ஆதலின், "சாந்தியையடைந்து சுகமாவிரு" என்றமட்டில் எவ்வளவுதான் விளம்பினும் அது கட்டுரையாகாது. பெரும்பாலும் பயனில் மொழிகள் பயில்வதேயாய் முடியும். உள்ளத்தின் நிலையாம் இப் பக்தி அமைதி யனையவை அதனிடத்தே உதிப்பதற்குரிய வகை யொன்றுவகுக்க வேண்டும். இன்றைக் கிவ்வுலகம் இருக்கும் நிலையை நோக்குங்கால், முன்னைய யோகம் ஆசாரம் சமஸ்காரம் முதலியமுறைகளை மேற்கொள்ளுங்களென்று சொல்லத்துணிபவர் சிலரினுஞ்சிலரே. எனின், அரசியல் சனசமூகம் முதலிய சீர்திருத்த முயற்சிகளால் உலகத்தை உழக்காமல் அமைதியே ஆதாரமாயவோர் வாழ்க்கையில் நாட்டத்தைச் செலுத்திவைப்பார் அருமையாவதுடன், அவர்களுள், அவ்வமைதியை அடையும்வழி பயிற்றிவைப்பார் பின்னும் அருமையாகின்றனர்.



# தேவாரமும் வான நூலும்

### கடவுள் வாழ்த்து.

கணக்கி லாரையுங் கற்றுவல் லாரையும்
வணக்கி லாநெறி கண்டுகொண் டாரையும்
தணக்கு வார்தணிப் பாரெப் பொருளையும்
பிணக்கு வாரவர் பேரெயி லாளரே.

திருநாவுக்கரசர்.

### புனைந்துரை.

சகோதர சகோதரிகளே ! *

கணிதசாஸ்திரங்களில் மிகவும் வல்லவராய பழந்தமிழர் வானநூலினை எவ்வாறு பரிபாலித்தனரென்பதும், அது எவ்வாறு அவர்களுக்குப் பயன்பட்டதென்பதும், உஷ்ணமாகாணங்களில் நட்சத்திரத்தோற்றமும், காலக்கிரமத்தில் காணப்படும் கோளசம்பவங்களும் எவ்வெவ்விதமான பயன்களைத் தரக்கூடுமென்பதும் அவற்றைத் தேவாரத்தில் நமது சமயகுரவர்கள் எவ்வாறு குறிப்பிட்டன ரென்பதும், துருவநட்சத்திரத்தின் நிலை யாதென்பதும், அந்நிலை தேவாரத்தில் விளங்குவதால், சங்கம்முதல் சுந்தரர் ஈறாக உள்ள நூல்களின் காலவரையறை இதுகாறும் சித்தாந்தமெனப் புலவர்களால் முடிவு செய்யப்பட்டவை புனர்விசாரணைக்குப் பாத்திரமாகாவோ என்பதும், நமக்கு அவ்வாறு தமிழ்ப் புலவர்களிடம் முறையிடப் போதுமான பலம் நமது ஆதரவுகளுக்கும் சான்றுகளுக்கும் உளதோ வென்பதும், கல்வியறிவிற்சிறிய ஒரு பெண்பாலா மெளியேன் இச்சொற்பொழிவின் கருத்தாம். அவை முறையே வருமாறு :

### 1. பழந்தமிழரும் வான நூலும்.

#### (i) கணித ஏற்றமும் வானநூற் சிறப்பும்.

எல்லா அறிவியல் நூல்களினும் மிகவும் மேம்பட்டது கணிதமன்றோ? எத்தகைய தத்துவசாஸ்திரியாயினுஞ் சரி, கணிதத்தை அடிப்படையாய்ப் பெறுவிடின், அன்னோன் ஆராய்ச்சி பழுதாவது திண்ணம். ஆன்மதத்துவ ஆராய்ச்சியாயினும் சரி, இயற்கைத்தத்துவ ஆராய்ச்சியெனினும் சரி, தேகதத்துவஆராய்ச்சி யென்றாலும் சரி, ஆழ்ந்து சென்று உழைப்போர்க்குக் கணிதம் மூலாதார மன்றோ? ஆதியில் மேல்நாட்டுத் தத்துவ ஆராய்ச்சிகள் அனைத்திற்கும் மூலபுருடனான பைதாகராஸ் (Pythagoras) என்னும் கிரீக்கு சாஸ்திரியைக் கடவுளிலக்கணம் யாதென வினவியபோது, அவன் கொடுத்த விடையாவது " ஐயா! கடவுளென்பது ஒருவட்டம். அதன் மத்தியப்புள்ளி எங்குமிருக்கும். அதன் சுற்றுக்கோடு எங்குமிராது ", எனக் கணிதவுருவகத்தில் பதியின் இலக்கணம் பகர்ந்தான் என்றறிகின்றோம். எனவே உருத்திரன் மால் முதலாகத் தம்பமீறாக வுள்ள எப்பொருள் ஆராய்ச்சிக்கும் கணக்குநூல் திறவுகோலாம்.

* புதுக்கோட்டை இராச்சியத்திலுள்ள வலம்புரி நகரில் அலர்மேலு பெண்கல்லூரித் திறப்புவிழா நடந்த9-5-1930 வெள்ளிக்கிழமை மாலை திருவாளர் கா. சுப்பிரமண்யம் பிள்ளை எம். ஏ. எம். எல் அவர்கள் தலைமையில், சென்னை கௌரவ இராஜதானி மாஜிஸ்டிரேட்களில் ஒருவரான ஈ. த. சொக்கம்மாள் பி. ஏ. எல். டி செய்த சொற்பொழிவு.

கணிதசாஸ்திரம் பன்முகத் துறைகளில் பற்பல நூல்களாய் விளங்கினும், புராதன நாகரிகநிலயத்திற்கு எல்லாத் தேயங்களினும் முன்னே நின்றது கோளசாஸ்திரமே. பல்லாயிர வருடங்களாய் நமது நாட்டில் பின்னர்வரும் கோளசம்பவங்களை எல்லாம் முன்னரே தப்பாது கணித்தறிந்தனர். கிரகணங்கள் வரும் இலக்கணத்தால், மழை சுகம் விபத்து போர் முதலிய நிமித்தங்கள் எவ்வளவுகாலத்தில் நேருமென்பதை நம்முன்னோர் சற்றேறக்குறையப் பிழையின்றிக் கணக்கிட்டுவந்தனரென்பதும் நாம் பழைய நூல்களிற் காண்கின்றோம் ? இதன்றியும் காலமழை பெய்வதற்குரிய வருடபாகங்கள் யாவையெனத் தேர்ந்து பஞ்சம்நேராது பயிர்த்தொழிலைக் காத்தும், பெரும்பொழுதுகளின் * காற்றுநிலை யறிந்து திரைகடலோடியும் திரவியம் தேடினர். நம் பழந்தமிழர் ஐரோப்பியநாடுகளிற் சென்று தங்கள் வியாபாரம் கி. மு. வில் பல நூற்றாண்டுகளாய் நடத்தினதற்குப் பற்பல சான்றுகள் அப்போதைக்கப்போது ஆங்காங்குப் பத்திரிகைகளில் வெளிவருவன யாவரும் அறிந்த விஷயமே இதன்றியும் புராதன ஐரோப்பிய பாஷைகளில் தமிழ்ச்சொற்கள் விரவியிருப்பது போதுமான அத்தாட்சியன்றோ ? ஆகையால் பழந்தமிழர் கடற்பிரயாணத்தில் மிகவும் வல்லவரென அநுமானிக்கலாம். தேவாரத் துதிகளில், உதாரணங்கள் காட்டி முறையிடும்போது, நாவாயும் மீகானும் படும் கஷ்டங்களையும் ஆபத்துக்களையும் உவமானப் படுத்துவன காண்க :—

மனமெனுந் தோணி பற்றி, மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சாக்கை யேற்றிச் செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணு
துனையுனு முணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே!

அப்பர்—திருவொற்றியூர்—திருநேரிசை 1.

நம் சமயகுரவர் காலத்தில் வணிகத்திற்காகக் கடலோடும் வங்கம் தன்வினை யினிது முடித்து மீளுங்காலை, பொன் முதலிய நிதிகள் எத்துணை கொண்டு வருமென்பதும், கப்பற்காக எவ்வளவு பொருள் செலவாகிறதென்பதும், சுந்தரர் ஒருவாறு திருவஞ்சைக்களத் திருப்பதிகத்திற் குறிப்பிடுகிறார்.

வீடின் பயனென் ? பிறப்பின் பயனென் ?
விடையே றுவதென் ? மதயா னைநிற்கக்
கூடும் மலைமங் கையொ ருத்தியுடன்
சடைமேற் கங்கை யாளைநீ சூடிற்றென்னே?
பாடும் புலவர்க் கருளும் பொருளென்
நிதியம் பலசெய் தகலச் செலவில்
ஆடுங் கடலங் கரைமேல் மகோதை
யணியார் பொழிலஞ் சைக்களத் தப்பனே !

திருவஞ்சைக்களத்தில் சேரமான் பெருமானுடன் வீற்றிருந்த இவருக்குக் கடலில்நடக்கும் வணிகப் போக்குப் பிரத்தியட்ச அநுபவமாதலால், இவர் கூறும் சில சொற்றொடர்களிலேயே, எவ்வளவோ நாம் கண்டறியத்தக்க சங்கதிகள் உள. அவற்றில் சில ஆராய்வோம்:—

* பெரும்பொழுது - இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என்னும் வருடத்தின் ஆறு பாகங்கள்.

பல்லாயிரம் மைல்கள் கப்பல்யாத்திரை செய்த தமிழருக்கு இக்காலத்திய மாலுமிக் கருவிகளும், திசைகாட்டு கருவிகளும், இருந்ததில்லை. மாலுமி, தனது கண்ணையும் வானத்தினிலுள்ள நட்சத்திர வெண்ணையும், தான் செல்லும் திசை வேகம் தூரம் முதலியனவற்றால் மனதிற் கணித்தே, போகும் மார்க்கம் பிழையின்றிச் சென்று, புயல் சுழல் கற்பாறை முதலிய துன்பங்களுக்கு ஒதுங்கி வங்கத்தைநடத்துவான். கப்பல்வணிகம், பெரும்பாலும் இடுக்கணின்றி நடந்தேறியதால், சிலப்பதிகாரத்தில் விளக்கிக் காட்டியிருக்கும் தமிழ்நாட்டின் பெருஞ் செல்வம் கைவந்ததென நாம் அநுமானிக்கலாகும். கடற்பிரயாணத்திற்கு வானசாஸ்திரம் இன்றியமையாததாக விருந்தது. ஏனெனில் அது யாதொரு மாறுதலில்லா இயற்கைச் சட்டங்களை நிரூபிப்பதாலே யாம். இவற்றைத் தாயுமானவர் வெகு அழகாக (இயற்கைச் சாதக நிலையில்) வெளியிடுகின்றார். இருசுடரை நோக்கி,

"நேரே தா னிரவுபகற் கோடா வண்ணம்
நித்தம்வர வுங்களையிந் நிலைக்கே வைத்தார்
ஆரேயங் கவர்பெருமை யென்னே?'' யென்பேன்;
"அடிக்கின்ற காற்றே! நீ யாரா லேதான்
பேராதே சுழல்கின்றாய் ?'' என்பேன்; "வந்து
பெய்கின்ற முகில்காள் ! எம்பெருமா னும்போல்,
தாராள மாக்கருணை பொழியச் செய்புஞ்
சாதகமென் னே? கருதிச் சாற்றும்'' என்பேன்.

என்று தாயுமானவர் மொழிந்ததுபோலப் பெரும்பொழுதிலும், * சிறுபொழுதிலும், உதய அஸ்தமனங்கள், காற்றுமாறுதல், மழை, முதலியன, குறித்த காலங்களில் நேருமென்பது வானநூலினது துணிவாதலின், அதன்வழி உலகப்போக்குஞ் சென்றது.

(ii) உஷ்ணமாகாணங்களில் நட்சத்திரத் தோற்றம்.

பழந்தமிழர் வசித்திருந்தவிடம் கபாடபுரமெனின், அவர் வானநூல், பூமியின் இருசின் மத்தியமாகாணத்தினின்று ஏற்பட்டதென்பது திண்ணம். குமரிக்குத்தெற்கிலிருந்து வானத்தைஇராக்காலத்தில் உற்று நோக்குங்கால் ஆங்கிலேய வானசாஸ்திர அளவை தரும் கிரீன்விச் (Greenwich) நட்சத்திரசாலையில் குறிக்கப்படும் பட விவரங்களைச் சற்று நாம் மாற்றவேண்டுமென்றோ? இலண்டன் பட்டணத்திலிருந்து இரவில் வானத்தைப் பார்த்தால் துருவநட்சத்திரமானது உச்சிக்குச் சிறிது வடதிசைக்குச் சாய்வாய்க் காணப்படும். இதைச்சுற்றிப் பெருங்கரடி (Great Bear) என ஆங்கிலேயர் கூறும் சப்தரிஷிகளும், சிறு கரடி (Little Bear) என்னும் நட்சத்திரங்களும் வட்டமிட்டு வருமன்றி அஸ்தமிப்பதே யில்லை. மேஷம்முதல் மீனம் ஈறாக உள்ள பன்னிரண்டு இராசிகளும் தென்கிழக்கில் உதித்துத் தென்மேற்கில் அஸ்தமிக்கின்ற நமது தென்னாட்டிலோ துருவன் வடக்கில் அடிவானத்தில் பூமிமட்டத்திற்குச் சற்று மேலே தோன்றுவான். இப்போது துருவனாக விளங்குவது உத்திரட்டாதி என்று மொழியப்படும் நட்சத்திரக் கூட்டத்தில் ஒன்றாகும். அது இரவும் பகலும் ஒரு தலத்திலேயே மாறாது காணப்படும். அதுவே சரியான வடக்காதலால் இதைக்கொண்டு மற்றத் திசைகளைக் காண்கின்றோம். சூரியன் வதியும் இராசியும், அதன் இருபக்க விராசிக ளொவ்வொன்றும் இரவிற் காணப்படா. ஏனைய ஒன்பது இராசிகளும் மேகங்களில்லாத இராக்காலங்களில் சற்று வடகிழக்கில் உதித்துச் சற்று வடமேற்கில் அஸ்தமிக்க நாம் காணலாகும். அவை தத்தம் பெயர்க்குரிய ஜந்துக்கள்போல் பெரும்பாலும் தோன்றும். ஆயினும் இப்பன்னிரண்டு இராசிகளை முறையே ஆராய்ந்து பார்க்குங்கால் அசுவனிமுதல் இரேவதி ஈறாக உள்ள இருபத்தேழு நட்சத்திரங்களும் அமைந்திருப்பன வென்பதை அறியலாம். பன்னிரண்டு இராசிகளுக்கு இருபத்தேழு நட்சத்திரமெனின், சூரியன் ஒவ்வொரு நட்சத்திரப் பிரதேசத்திலும் வானத்தில் சுமார் $13\frac{1}{2}$ நாள் வசிப்பதுபோல் காணப்படுவான். இவ்வாறு சூரியன் வருடந்தோறும் வருங் காலங்களில், அதனால் விளையும் பயன் இன்னதென வானசாஸ்திரிகள் கண்டறிந்தனர். சூரியன் கிருத்திகை யென்னும் "அக்னி நட்சத்திர''த்தில் வரும் போது "கத்திரி'' என்னும் கொடிய உஷ்ணத்தால் பூமி வருந்தும். அதினின்று சிலகாலத்திற்குப் பின்னர்த் திருவாதிரைக்குச் சூரியன் செல்லும்போது சேரநாட்டில் கோடைமழை பெய்யும். திருவாதிரை ஞாயிற்றில் மழை தப்பியதெனின் மிளகு பஞ்சமாம். இவ்வாறு நம் முன்னோர் நட்சத்திரத் தோற்றத்தால் வருடபாகங்களில் வரும் பலனை நியமித்துள்ளார்.

* சிறுபொழுது - காலை, நண்பகல், எற்பாடு, மாலை, யாமம், வைகறை - என ஒரு தினத்தின் ஆறுபாகங்கள்.


ஸ்ரீ. சிவப்பிரகாச சுவாமிகள் இயற்றிய தமிழ் வேதங்கள்

ஸ்ரீ ஆத்ம புராணம் ரூ. 8, ஸ்ரீ பகவத்கீதா கூடார்த்த தீபிகை வசனம் ரூ. 5, நியாயப் பிரகாசம் வசனம் ரூ. 4, வேதாந்த மகா சிந்தாமணி ரூ. 4, தத்துவாநு ஸந்தானம் ரூ 2-8, நியாய முக்தாவளி அணா. 12, கீதாத்திரயம் (பகவத்கீதை, ஈசுவரகீதை, பிரமகீதை வியாக்கியானத்துடன்) ரூ. 2, விருத்தி பிரபாகரம் ரூ. 4.

ஆரணி. குப்புசாமி முதலியார் இயற்றிய துப்பறியும் புதிய நாவல்கள். நிகரற்றவை !

இரத்தினபாய் அல்லது இந்திரஜாலக் கள்ளன் ரூ. 2-8, கடற்கொள்ளைக்காரர்கள் (2-பாகம்) ரூ. 3-4-0 இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ரூ. 2, கிருஷ்ணவேணி ரூ. 2, சந்திராபாய் அல்லது சங்கரதாஸன் வெற்றி ரூ. 2, இரத்தின புரியின் இரகசியம் (மூன்று பாகமும்) ரூ. 6, கைவல்லிய நவநீத வசனம் ரூ. 1-8, ஆனந்த சிங். ரூ. 2.

இதர புஸ்தகங்கள்.

மாதவி மாதவன் அல்லது ஓர் துணிகரயான சாமர்த்திய ரயில்வேக்களவு (2 பாகம்) ரூ. 2, விக்ரமாதித்தியன் கதை ரூ. 2, வில்லிபாரத வசனம் அல்லது மகாபாரத வசன சங்கிரகம். (750 பக்கங்கள்) ரூ. 3, கைத்தொழில் முறைகள் ரூ. 1-8, வர்த்தகச் கணித நூல் அல்லது, தமிழ்புக்கீப்பிங் ரூ. 2, பாரிசக்கதைகள் ரூ. 3, வேதாந்த பாஸ்கரன். ரூ. 3.

V. S. T. Swamy & Co., Book Binding and Novel Depot,
VEPERY, P. O., MADRAS.




# மாதவி மாதவம்

## 1. தேவகணிகைமரபில் மாதவிநல்லாள் தோன்றியது.

செந்தமிழ் மொழியைச் செல்வர் கூட்டுண
நந்தலில் நூல்கள் நலம்பெற வருளிய
நடுநீர் மையினெம் நகைமூ தாட்டி
தொடுநீர் வரைப்பிற் சோறுடைத் தென்னும்
தொல்சீர் பரவிய சோணாட்டின்

தலைமைநகரமாகக் காவிரிப்பூம்பட்டினம் முன்னொரு காலத்துத் திகழ்ந்துநின்றது. புகாரெனவும் சம்பாபதியெனவும் அக்காலம் அழைக்கப்படலாய அத்திருநகர் மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கமென இரு பிரிவினை யுடையது. அவ்விரண்டனுள் மரு
பூம்புகார் நகர்
வூர்ப்பாக்கம் பலவகை யணிகலன்களுள்ள சரக்கறைகளையுடைய மான்கண்போன்ற சாளரத்தோடுகூடிய மாடமாளிகைகளை ஒருபா லுடையது. பிறிதொருபால் வளமைமிக்க யவன ரிருக்கைகளைப் பெற்றுளது. மரக்கலந் தரும் செல்வம்பொருட்டுத் தம் பிறப்பிடத்தை விட்டுப்போந்த பிறநாட்டார் கலந்துவாழும் கடற்கரையை ஒருபக்க முடையது. தொய்யிற் குழம்பும், மெய்யிற்றாவும் நறுமணத்தூளும், தண்ணறுஞ் சாந்தும், செவ்விய மலர்களும், அவற்றால் தொடுத்த மாலையும் பிறவும் விலைபகர் தெருக்கள் வேறொருசார் விளங்குவன. பட்டுநூலானும், எலிமயிரானும், பருத்திநூலானும் நுண்ணிய தொழில்மாண்டோர் இருக்கைகள் மற்றொருபால் மிளிர்வன. அவரை துவரை நெல் சோளம் முதலிய உணவுப்பொருள்கள் விற்கும் கடைகள் பொலிவன ஓரிடத்தே. அப்பமும் பிட்டும் விற்பவ ரொருசார். கள்விலை பகரும் கடைகள் ஒருசார். உப்பும் மீனும் விற்பவரொருபால். ஏலம் இலவங்கம் முதலிய வாசனைப்பொருளோடு வெற்றிலைவிற்குங் கடைகள் மற்றொருபால். வெண்கலக்கன்னார், செம்புக்கொட்டிகள், மரம்வெட்டுந் தச்சர், கொல்லர், ஓவியக்காரர், சிற்பக்காரர், உருக்குத்தட்டார், இரத்தினப் பணிக்காரர், தையற்காரர், சீரை நெட்டி இவற்றால் புட்பம் வாடா மாலை முதலிய செய்தலில் மேம்பட்டோர், இசையில் வல்ல பாணர், முதலியவர்கள் வைகும் இடங்கள் ஒருபாலுமாக மருவூர்ப்பாக்கம் பொலிந்துநின்றது. பட்டினப்பாக்கமோ இராசவீதியும், அதனைச் சூழ்ந்து நால்வகைப் படையின ரிருக்கும் பரந்த இடங்களும், தேரோடு தெருவும், பெருங் கடைவீதியும், உயர்குடி வணிகர்வாழ் மாளிகை நிரையுடை மறுகும், வேதமோதும் விப்பிரர் இருக்கையும், உழுவித்துண்ணுங் காணியாளரும், உழுதுண்ணுங் குடிகளும், மருத்துவரும் சோதிடரும் வைகும் வேறுவே றிடங்களும், பொதுமகளிர் வைப்பும் உடையது. நாம் வரையப்புகும் நிகழ்ச்சியின் தொடக்கத்து, மாண்புடைய இவ் வணிநகர்தன்னைத் தலைமையிடமாப் பெற்று அரசுபுரிந்தவன் சோழன் கரிகாற்பெருவளத்தான். அப்புகார் நகரிலே, திருந்திய பொதியில் அருந்திறல் அகத்தியன் இட்டசாபத்தால் இந்திரன் அவைக்களம்நீங்கி மண்ணுலகிலோர் தேவ கணிகையாகப் மாதவி பிறந்த உருப்பசியின் மரபில்வந்த சித் நடனம் திராபதி யென்பவளுக்குப் பிறப்பிற் குன்றாப் பெருந்தோண் மடந்தை தாதவிழ் புரிகுழல் மாதவி நல்லாள் தோன்றினள். மையுண் கண்ணி மடந்தை மற்றவளை ஆடலும் பாடலும் அழகும் என்று இக்கூறிய மூன்றின் ஒன்றுங் குறைபடாமல் ஐயாண்டில் தண்டியம் பிடிப்பித்து, ஏழாண்டளவியற்றுவித்துப் பன்னீராண்டினில் சோழன் கரிகாற்பெருவளத்தானுக்குமுன்ன ரரங்கேற்றிக் காட்டுவதற்கு விழைந்தனள் அன்னவள் நற்றாய் சித்திராபதி. ஆடலாசிரியனும், இசையாசிரியனும், நாடகக்கவி செய்யவல்ல நன்னூற்புலவனும், தண்ணுமையோனும், குழலாசிரியனும், யாழாசிரியனுங் கூடி அவளது விருப்பிற்கு ஒருப்பட்டுப் புதுமையுறச் சமைத்தவோ ரருந்தொழில்காட்டும் அரங்கின்கண், பேரிசைமன்னர் பொருதுடைந்து புறங்கொடுத்த வழிப்பெற்ற வெண்கொற்றக் குடைக்காம்பைத் தலைக்கோலாக வைத்துப் பொற்குடத்தால் நீராட்டி மாலை சூட்டி, வீதியினின்ற தேரினை அரசன் அமாத்தியன் முதலானோர் அத்தலைக்கோலுடன் வலம்வந்து, அதனைத் தேர்மிசைநின்று பாடுவானது கையிற்கொடுத்து நகர்வலம் வந்தபின்னர், அரங்கிற் புகுந்து அத் தலைக்கோலை வைத்தனர். அரசன் முதலானோர் அவ்வவர்க்கேற்ற இருக்கை முறைகளி னிருந்தனர். இசைக்கருவியாளர் தாம் நிற்றற்குரிய விடத்தே நின்றனர். ஆடிமுதிர்ந்த தோரியமடந்தையர், நன்மையுண்டாகவும் தீமைகள் நீங்கவும் வேண்டித் தெய்வப்பாடலைப் பாடினர். இசைக்கருவிகளெல்லாம் அப் பாடலோடு பருந்தும் நிழலும் போல ஒத்திசைத்தன. அதுபொழுது மங்கைமாதவி அரங்கத்திலே வலக்கால் முன் வைத்தேறி, பொன்னனியன்றதோர் பூங்கொடி கூத்து நடித்தாற்போலப் பரதசாத்திரமுறை வழுவாமல் அபிநயித்துப் பாவகந்தோன்ற ஆடிக்காட்டினள். அவளது ஆடல் பாடல் அழகெனும் இவைகளைக் கண்களிப்பக் கண்டுகேட்டு நெஞ்சுருகிய மன்னன் அவள் நிலைமைக்குத் தக்க பட்டப்பெய ரீந்து ஆயிரத்தெண் மாதவி பரிசு கழஞ்சு விலைபெறக்கூடிய பசும்பொன் பெறல் மாலையை மாதவியின் தோழியாகிய வயந்தமாலையின் கையிற்கொடுத்து, "இதனை விலை கொடுத்து வாங்கி மாதவிக்கு அணிபவர் யாரோ அவரே அவட்கு மணமகனாவான்'' என அறிவிக்குமாறு கூறினன். அவளும் அங்ஙனமே அந்நகர்ச் செல்வக்காளையர் திரிதரும் மறுகிடத்தே நின்றனள். அம் மாலையைக் கோவலன் வாங்கிக் கூனியொடு [வயந்தமாலையின் மற்றொருபெயர்] அவள் தலைவியின் மனையகத்தே புக்கான். அங்ஙனம் புக்கபின் காதல்சிறந்த மாதவியோடு முல்லை முதலிய மலராற் கோவலன் றொடுத்த மாலையணிந்து பொழிலாட் காதல் டயர்தலும் புனல்விளையாடலும் காமந் துய்த்துக் களிமகிழ் வெய்தலுமே அவனது நாள் வினை யாயிற்று. அன்றிருந்து மாதவியின் கட்டழகிற் சிக்கிப் பிரிதல்கூடானாய்த் தன் மனைவியையும் மனையையு மறந்தான் நம் வரலாற்றுத் தலைவனாங் கோவலன். பூம்புகார் நகரிற் பொருள்வள மிக்க மாசாத்துவானெனும் மாண்புடையோனின் அருந்தவப் புதல்வன். இவன் ஈகையிற் சிறந்த மேதகை

யாளன் மாநாய்க்கன் என்னும் மாநிதிக்கிழவன் மகள் கண்ணகி யென்னுங் கட்டழகியைப் பதினாறாண்டகவையின் மணமுடிக்கப் பெற்றவன்.

இங்ஙனம் கோவலனும் மாதவியும் கூடிமகிழ்ந்து வாழ்கையில், மட்டார்குழற் செல்வி மாதவியென்னும் அம்மங்கைநல்லாள் கருவுற்றுத் திங்கள் பத்தினிறுதியிற் செம்பொற் பாவையன்ன வோர் பெண் மாதவி மகவை யீன்றாள். அதுபொழுது மாதவி பிறப்பு யின் நற்றாயும் மற்றவரும் கோவலனும் உற்ற மகிழ்ச்சிப்பெருக்குக் கூறுமொரு தரத்ததன்று. பின்னரம் மகவிற்குப் பெயரிட அன்னார் முயன்ற பொழுது கோவலன் அவரை விளித்து "எம்குல முன்னோன் முன்னமொருகால், இடையிருள்யாமத்து எறிதிரைக்கடலுள், கலங்கவிழ்தாலால் கலக்கமிகவுற்றுச் சிலநாள் நீந்தியும் கரைநண்ண வியலாது செயலற்று வருந்தாநிற்புழி, புண்ணிய தானம் புரிந்தோனாகலின், இந்திரனேவலா லிங்கர் புரக்கும், மணிமேகலையெனு மாதெய்வந் தோன்றி, "வந்தே னஞ்சல்! மணிமேகலை யான், உன்பெருந் தானத்து உறுதி யொழியாது, துன்பம்நீங்கித் துயர்க்கடலொழிக'என, விஞ்சையிற் பெயர்த்து விழுமந்தீர்த்த எங்குல தெய்வப்பெய ரீங்கிடுமின்" எனமொழிந்தான். அணிமேகலை யாராயிரங் கணிகையர்'மணிமேகலை'யென நாமஞ்சார்த்தி வாழ்த்தினர். மாதவியும் கோவலனும் வறியவர்க்குச் செம்பொன் மாரியெனச் சொரிந்தனர். அந்நாள், வளைந்த யாக்கை மறையோனொருவன் தளர்ந்த நடையொடு தண்டுகாலூன்றித் தானமேற்கச் செல்கையில், பாகர்களுக்கு வயப்படாது அவ்வழியே வருஉம் நிறையழியானை யொன்று சினத்தால் அம்முதியவனைக் கொள்ள, அஃதறிந்த கோவலன் ஆங்கே விரைந்து சென்று அவ் யானையை உரப்பித் தன்கையாலே மறையோனை நீக்கித் தான் அதன் கையிற்புக, அவ்வளவில் அவ்வயமா அவனைத் தன் கையால் வளைத்தது. அவன் அதன் கையினின்று நீங்கி வெள்ளிய கோட்டிலேயடங்கி, அதுவே பற்றுக்கோடாக ஏறிப் பிடரிடத்தமர்ந்து அதன் மதத்தை யடக்கி முதியவனுக்கு வேண்டிய வழங்கி விடுத்தான். ஓர் பார்ப்பனி தான் வளர்த்த கீரி தன் பிள்ளையைக் காத்திருந்ததாக, ஓர் பாம்பனுக அதனைக் கௌவித்துணித்த குருதிவாயொடு தன்வரவையெதிர்பார்த்து எதிர்கொண்டதனைத் தன்பிள்ளையைக் கடித்ததெனக் கருதி, ஆராயாது தன் கையின் மணையாற் புடைக்க அது மரித்தது. அச்செயலறிந்த அவள்கொழுநன் "இத் தீவினையாளோடு இனி வாழ்தல் ஒவ்வாது" என மனம்வெறுத்துக் கங்கையாடவடதிசை நோக்கிச் சென்றான். அதனால் அவள் நெஞ்சழிந்து வருந்தலைக் கண்ணுற்ற கோவலன் அவளது கொலைப்பாவம் நீங்க அறநூல்வழியே தானம் புரிந்து அவள் கொழுநனை வருவித்து அவள் இடர் நீக்கினான். இங்ஙனம் அந்நாள் இவன் புரிந்த அறச்செயல் பலவாகும்.

## 2. கண்ணகிதுயரும் மாதவிமகிழ்வும்.

அலைநீ ராடையும் மலையெனுமுலையும் அருவிமுத்தாரமும் மாரிக்கூந்தலுமுடைய மண்ணக மடந்தை விரிகதிர்பரப்பி உலகமுழுதாண்ட ஒருதனித் திகிரி மாலைப் புரவோனான தன்கொழுநனைக் காணாது, பொழுதின் திசையாகிய தன்முகம் நான்கும் பசப்பூர மாண்பு மலர்க்கண்கள் நீர்வார மெய்பனித்து வருந்துகின்ற வேளையில், தம் கடமையையறிந்தொழுகும் குடிகள் துயரமுற, அவ்வியல்பில்லா ஏனையோரைத் துணைகொண்டு,வென்றிகொள் மன்னர் இல்லாத அமயமறிந்து அவர்நிலங் கெடுமா றவண்புகுந்திட்ட குறுநிலமன்னரைப்போல மாலையெனுங் குறும்பு அப் புகார் நகரத்தின்கண் ஆட்சிபுரியத் தொடங்கலாயிற்று. அதனால், தத்த மனம்விட்டகலாக் கணவரைப் பிரிந்தமகளிர் தனித்துய ருற்றனர்; காதலர்ப் புணர்ந்த மாதரார் களிமகிழ் சிறந்தனர். கோவலர் வேய்ங்குழலிலே முல்லைப்பண்ணைப் பாடாநின்றனர். வண்டுகள் மகளிர் குழலிலே வளர்கின்ற முல்லைமலரிற் படிந்து இன்னிசையை யெழுப்பின. தானே தளிர்ப்பித்தும் பூப்பித்துஞ் செய்த அரும்புகளிற் புகுந்து அவற்றின் மணத்தை யுண்ணும் வண்டுகளைக் கடிந்தோட்டி, அதனைத் தென்றலஞ் செல்வன் தெருக்கள்தோறும் தூற்றாநின்றான். மகளிர் மணிவிளக்க மேற்றினர்.

இரவின் அந்நிலையில் பிறைபெனுஞ் செல்வன் இயல்பு. தோன்றி, ஆண்டில் இளையனாயினும் அளியினும் வலியினும் தெறலினும் மிக்க தென்னவர் குலமுதல்வனாகலின் புன்மாலைச் சிற்றரசைப் பொருதோட்டித் தண்கதிர் பரப்பிநின்றான். ஆயினும் என்? அவனது ஆட்சியும் ஒருசிலர்க்கு இன்பமும் வேறுசிலர்க்குத் துன்பமுமே பயந்து நின்றது. வெண்ணிலவின் தண்ணொளி பாயும் நெடுநிலா முற்றத்து, மல்லிகையும் முல்லையும் மணங்கமழ் பூஞ்சேக்கையிலே, தனது ஆவியனைய கோவலனுக்கு ஒருகால் கலவியும் மறுகாற் புலவியும் மாறியளித்து மயங்கிநின்று, மந்தமாருதத்தாற் சிந்தை தெளிந்து, அன்னவன் மார்பகத்தே சென்னிசாய்த்துக் கண்துயில்கொண்ட காதலிற்சிறந்த மாதவியை யொத்த சிலர்க்கே அன்றிரவு இன்பந் தருவதாயிற்று. மற்றுக் கணவனைத் தணந்து கையறுநெஞ்சக் கண்ணகியொத்த வனையோர்க்குத் துன்பமே யூட்டிநின்றது. இன்னவர்தாம் அவ்வேனிற்காலத்து வெண்பிறையின் தண்கதிரும் மலயவெற்பின் நறுங்காற்றும் தவழ்ந்துலவும் அரமியத்தே நறுமலர்ப் பள்ளிதுறந்து, கூதிர்காலத்திற்குரிய இடைநிலத்து ஒடுங்கி, ஆண்டுத் தென்றலும் நிலவும் புகாவாறு சாளரக்கண்களடைத்து, குவளையன்ன தம் நெடியகண்கள் நீர்துளிப்ப வருந்தலாயினர். அம்மட்டோ! அன்னார் சீறடி தம்மை யணியாது நீத்தமையான் சிலம்புகள் அச் சிறப்பிழந்து நின்றன. திருமுகத்து அரும்பிநிற்கும் பேறு சிறுவியர் வொழிந்தன. செங்கயல் நெடுங்கண் தன்னை யணியலொவ்வாமையால் அஞ்சனம் சீரிழந்தது. வாணுதலைத் தழுவிநிற்கும் பேறு திலகம் பெறாதாயிற்று. மையிருங் கூந்தலின் மணத்தைப் புழுகுநெய் பெறாதுபோயிற்று. அந்தோ! தம்மைக் கூடினாற் பெறுந் தவளவாணகையை அவர் கொழுநர் பெறாது போயினர். இங்ஙனம் கணவரைத் தழுவிய மகளிர் களிசிறப்பவும், மற் றவரோடு கூடப்பெறா அணங்கனார் அல்லலுறவு மாக அன்றிரவுமுழுதும் அநங்கன் துயிலின்றி அயில்வேலோச்சி நின்றான்.

"கூடினார் பானிழலாய்க் கூடார்பால் வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோற் காட்டிற்றே—கூடிய
மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர் மதிவிரிந்து
போதவிழ்க்குங் கங்குற் பொழுது"



# நம்மாழ்வார் வைபவம்.

## திருவாய்மொழி.

[492-வது பக்கத் தொடர்ச்சி]

முதல் பத்து, 6-ம் பதிகம்.

பரிவதில் ஈசனைப் பாடி
விரிவது மேவ லுறுவீர்
பிரிவகை யின்றிநன் னீர்தூய்ப்
புரிவதுவும் புகை பூவே. 1

பரிவது - துக்கம், பரிவதில் - துக்கமில்லாத, விரிவது - விஸ்தாரமாவது - அதாவது ஞானத்திலும் கைங்கரியத்திலும் மேன்மைப் படுவதான, மேவல் - சம்பத்து, பிரிவகையின்றி - பிரிகையாகிற மார்க்கத்திலகப்படாமல்: புரிவதுவும் - சமர்ப்பிப்பதும்.

பொழிப்புரை:—துக்கம் எத்தனையும் கலப்பில்லாத ஸர்வேச்வரனை ஸர்வகாலமும் இடைவிடாது தொடர்ந்து திருநாட்டிலே சென்று அடிமைசெய்ய வேண்டுமென்கிற பரமசம்பத்தை உத்தேசிக்கின்றவர்களே, அவனுக்கு இங்கே பூஜையாகின்ற தொண்டு செய்திட அந்த ஆராதனத்துக் குரித்தான நல்ல பூக்கள் முதலான உபகரணங்கள் கைக்குக் கிட்டவில்லையே என்ற சங்கையால் அவ்வாராதனம் நிறைவேற ஸாத்தியமில்லை என்று எண்ணியெண்ணி மனதில், பூஜை நிறைவேற இயலாதென்று வருத்தப்படாது பக்தியோகத்துக்கு முதல்அங்கமான பூஜையை உங்கள் கையில் அகப்படும் சுத்தமான ஜலம்கொண்டும் ஏதேனும் ஒரு புகைகொண்டும் தீபங்கொண்டும் நடத்துங்கோள். அந்த அல்பமான உபகரணங்களை அவன் தன் ஸௌசீல்யத்தால் ஏற்றுக்கொண்டருள்வான். ஆகையால் மேல்கண்ட காரணங்கொண்டு அவனை விடாமல் பக்திசெய்யுங்கோள். திருநாடும் அவன் நிரந்தர கைங்கரியமும் உங்களுக்குச் சித்தமாய் வாய்க்கும்.

குறிப்புகள்:—துக்கமில்லாதவன் என்பது பகவானுடைய எட்டு அஸாதாரண குணங்களுக்கும் உபலக்ஷணம்.(1) "வினைத் தொடர்பின்மை" (2) மூப்பின்மை (3) மரணமின்மை (4) சோகமின்மை (5)உணவு நசையின்மை (6) நீர்வேட்கை யின்மை (7) தான் விரும்பியதைத் தவறாமல் பெறும் தன்மை (8) தான் கருதியதை நிறைவேற்றிக்கொள்ளும் சக்தி. இவ்வெட்டும் பகவானுக்கு விசேஷகுணங்கள்.

ஸ்ரீ மணவாளமாமுனிகள் கூறுவதுபோல் திருமாலை "உள்ளம் முற்றும் ஊடுருவ வோர்ந்து தளர்வுற்று நீங்க நினைத்த" வளவில் அவன் தன் "நீடிலகு சீலத்தால் பாங்குடனே பரிந்து" சேர்க்க, அதினாலுண்டான நிரவதிக பிரீதியாலே பிறர்களுக்கு அவனிடத்தில் பக்திசெய்வ தரிதன்று என்று ஆழ்வார் உபதேசிக்கிறார்.

---

மதுவார் தண்ணந் துழாயான்
முதுவேத முதல்வ னுக்கு
எதுவே தென்பணி யென்னா
ததுவே யாட்செய்யு மீடே. 2

ஈடு - தக்க பொறுப்பு, இவ்விடத்தில் தொண்டு செய்ய யோக்கியதை. பணி - தொண்டு - கைங்கரியம்.

பொழிப்புரை:— ஜாதி குணம் இவற்றால் தாழ்ந்த நாம், நிரவதிகமான ஸ்வரூபகுண விபூதியுள்ளவனுக்குப் பணிவுசெய்தல் எவ்வாற்றாலுந் தகுமோ, என்ற சங்கை வேண்டா. அவனுக்கு அடிமைசெய்ய வேணுமென்கிற அபேக்ஷையுள்ளவர்களை அவன் போக விடான். பூஜைசெய்வதே தகுதியென்று துணிந்து நடத்துங்கோள். அதுவே உங்களுக்கு உய்யுமாறு.

குறிப்பு:—இதுசிறந்தவொருஆப்தவாக்கியம். தாம் அநர்ஹதாநுஸந்தானத்தால் அவனை இழந்துபோகும்படி அவனைவிட்டு விலகுங்கால் இவரைத் தேற்றி இவர் தொண்டுகளை ஏற்றான். தம்மைப்போல அவனிடத்தில் அன்புவாய்ந்த மற்றவர்களும் "வளவேழுலகில்" முட்டுப்படாமலிருக்க இப்பாசுரத்தில் அவர்களுக்கு நல்ல உபதேசம் கற்பிக்கிறார் நம்மாழ்வார்.

---

ஈடு மெடுப்பு மிலீசன்
மாடு விடாதென் மனனே
பாடுமென் னாவவன் பாடல்
ஆடுமெ னங்க மணங்கே. 3

பொழிப்புரை:—முன்சொன்னபடி தொண்டுசெய்பவர்களின் உயர்வு தாழ்வு இவற்றைக் கவனிக்காமல் எல்லாப் பக்தர்களுக்கும் ஒன்றுபோலே நிற்கும் ஈசனிடத்தைவிட்டு என்மனம் ஒருபோதும் நீங்காது. என் நாவு எப்பொழுதும் அவனையே பாடாநிற்கும். என் சரீரம் தெய்வமேறி ஆட்டுவிக்குமவர்போல் சந்தோஷித்து ஆடும்.

குறிப்பு:—மனம் வாக்கு காயம் என்ற முக்கரணமும் அவனிடத்தில் எப்போதும் ஈடுபட்டு நிற்குமென்று தன் இலாபத்தைப் பிரஸித்திவரக் கூறி அநுபவிக்கின்றார் ஆழ்வார்.

---

அணங்கென வாடுமெ னங்கம்
வணங்கி வழிபடு மீசன்
பிணங்கி யமரர் பிதற்றும்
குணங்கெழு கொள்கையி னானே. 4

நான் அவனை என்மனதால் ஒருகணமும் விடாது தெய்வத்தால் மருளுற்றவர்போல் கிரமம் தப்பிக்கூட ஆடுவேன். இப்படிக் காடக்கூடுமோ வென்றால், பரமபதத்தில் நித்தியஸூரிகள் பகவானுடைய ஒவ்வொரு குணத்தை முன்வைத்து அக்குணமே சீரியதென்றும் மற்றுமொரு நித்தியஸூரிப் பகுதிகள் மற்றொருகுணமே சீரியதென்றும் புகழ ஒருவரோடு ஒருவர் வாதித்துப் பிணங்குகின்றார்க ளன்றோ! அதுபோல் அவன் குணத்தை அநுபவிக்கையில் கிரமம் அக்கிரமம் ஒன்றும் என்மனதுக்குத் தட்டுப்படாதநிலையில் என் தேஹம் பரவசமாகின்றது.

---

கொள்கை கொளாமை யிலாதவன்
எள்க லிராக மிலாதவன்
விள்கை விள்ளாமை விரும்பி
உள்க லந்தார்க் கோரமுதே. 5

பொழிப்புரை :—அந்தரங்க விருத்தியிலே சிலரை ஏற்கவும் சிலரை விடுக்கவும் இல்லாதவனுயும் மனதிலே உபேக்ஷை இராகம் இல்லாதவனுயும் இருக்கிற பகவான், உள்ளே தன்னுடன் கலந்தவர்க்கு ஓர் அமிர்தமாய், எப்பொழுதும் விடத்தகாத ஒரு போக்கிய வஸ்துவாகவு மிருப்பான். சிலரை விட்டு அகல்கின்றுனே அது எப்படி நேரிடுவது என்றால், தன்னிடம் உள்கலவாதவர்களுக்கு அவர்கள் அபேக்ஷிக்கும் சிறுபயனைகொடுத்துத்தான் அகல்கின்றுன்.

---

அமுத மமரர்கட் கீந்த
நிமிர்சுட ராழி நெடுமால்
அமுதிலு மாற்ற வினியன்
நிமிர்திரை நீள்கட லானே. 6

பொங்கியெழும் திரைகளையுடைய ஆழ்ந்த கடலிலே கண்வளர்கின்றவன் தேவர்களுக்காகப் பாற்கடலைக் கடைந்து அவர்கள் யாசித்த அமிர்தத்தைக் கொடுத்தான். ஐயோ! அவன் அழகான திருவாழியை ஏந்தி ஆச்ரிதர்களுங் கருகுவந்து அவர்களிலும் அதிக அன்புபாராட்டும் ஸ்வபாவ முடையவனென்று அத்தேவர்கள் அறியாது போயினுரே! அவனையே நினைந்து நினைந்து அவன் அழகிலும் ஸௌசீல்யத்திலும் ஈடுபட்டு அமிர்தத்தைவிடச் சுவையுள்ள அவனிடத்தில் மனம்வைக்கவேண்டுமென்ற சூழ்ச்சியும் ரஸாநுபவமுமில்லாத என்ன அற்பர்களோ! கேவலமான அமிர்தம் மாத்திரம் கைக்கொண்டு அத்தேவர்கள் அகன்றுர்களே, என்னகொடிய பாவம் இது, என்று பரிதபிக்கிறுர்.

---

நீள்கடல் சூழிலங் கைக்கோன்
தோள்கள் தலைதுணி செய்தான்
தாள்கள் தலையில் வணங்கி
நாள்க டலைக்க ழிமினே. 7

இராவணனைப்போல் தம் ஆச்ரிதர்களுக்கு அநிஷ்டம் விளைக்கும்வரை நிரவலிக்கும் சுபாவனுயிருக்கிற மஹாநுபாவனுடைய திருவடிகளைக் கொஞ்சங்கூடக் கூசாது உங்கள் தலையினுலே வணங்கிக்கொண்டு காலத்தைப் போக்குங்கோள்.

குறிப்பு :—பகவானைப் பரமபதத்தில் சேரும்வரையில் காலவிளம்பரத்தை ஸஹியாதவர், அவனுடைய திவ்விய சரிதங்களாகிய இராமாயணம் முதலான நூல்களைப் படித்துக் காலத்தைப் போக்கிக்கொளலாமென்று ஸூசிப்பிக்கிறுர்.

---

கழிமின் தொண்டீர்கள் கழித்துத்
தொழுமி னவனைத் தொழுதால்
வழிநின்ற வல்வினை மாள்வித்து
அழிவின்றி யாக்கந் தருமே. 8

அவனைத் தொழுதற்குமுன் அவனைத்தவிர எல்லா விஷயங்களிலும் உள்ள நசையைப் பற்றறுத்து ஆச்ரியுங்கோள். இப்படித் தொழுதால் பிரதிபந்தங்களான உங்கள் வினைகள் எல்லாவற்றையும் அவன் போக்குவான். அதுவுமன்றி நித்தியஸித்தமான பரமபதத்தில் நித்திய கைங்கரியமாகிய மஹா ஸம்பத்தையும் தந்தருள்வான்.

---

தரும வரும்பய னுப
திருமக ளார்தனிக் கேள்வன்
பெருமை யுடைய பிரானுர்
இருமை வினைகடி வாரே. 9

எல்லா விதிகளாலும் அநுஷ்டிக்கப்படும் தவத்திற்கு முக்கிய பலனுனவன் மேல்செப்பிய நித்தியஸித்த மஹா பேற்றினைத் தன்னை ஆச்ரயித்த பக்தர்களுக்கு அளிக்கும்போது அவனுடன் ஏகமனதுள்ளவளும், பெருந்தகைமையும் மஹத்தான ஔதாரியமும் பொருந்தினவளுமான மஹாலக்ஷ்மியினுடன் சேர்ந்து நின்று தந்தருள்வான்.

---

கடிவார் தீய வினைகள்
நொடியா ருமள வைக்கண்
கொடியா வடுபுள் ளுயர்த்த
வடிவார் மாதவ னுரே. 10

அத்தியந்தம் பக்தனை கெருடபகவானுக்குப் பிராட்டியுடன் கூடித் தன்னைக் கொடுக்குமாப்போல் உங்களுக்கும் தந்தருளும். இடைவழியிலே நிற்கும் பாபங்களை ஒரு க்ஷணத்தில் அறுத்துக்களையும்.

குறிப்பு:—நொடி ஆர் அளவை - ஒரு க்ஷணம் முடியுமுன். மாதவனுர் - ஸ்ரீயப்பதி. அடுபுள் - எதிரிகளை ஜெயிப்பதில் உற்சாகமுடைய கருடன். வடிவு ஆர் - அழகுபொருந்திய.

---

மாதவன் பால்சட கோபன்
தீதவ மின்றி யுரைத்த
ஏதமி லாயிரத்திப் பத்து
ஓத வல்லார் பிறவாரே. 11

கவிபாடுகிற தமக்கும் கவியை ஏற்கும் எம்பெருமானுக்கும் ஒரு தீங்கில்லாதபடி ஸ்ரீயப்பதியைப்பற்றிச் சடகோபன் உரைத்த இப்பாசுரங்கள், கற்குமவர்களுக்குப் பின் பிறப்புஒழித்து நிரதிசய பகவத்தாஸியத்தையும் கொடுக்கும்.

இத் தசகத்தின் பயன்:— பகவான், ஆராதனைக்கு உரிமை யுடையவனென்று ஆழ்வார் இத்தசகத்தில் அறுதியிடுகிறுர். இத்தசகத்துக்குப் பரோபதசத்தில் கருத்தாயினும் பிறர் பகவத்பக்தியில் நிலைபெற்றுச் சீரடையும்பொருட்டுத் தம் அநுபவத்தையும் ஆங்காங்குச் சுட்டிக்காட்டி அவர்களைத் தேற்றுகின்றுர்.

ஒட்டக்கூத்தர் பாடிய
**தக்கயாகப் பரணி**
(உரையுடன்)
மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் பதிப்பு.
இதுவரையில் அச்சேருத இவ்வரிய நூல் இப்பொழுதே வெளிவந்துளது. விலை ரூ. 4—0—0. வி. பி. செலவு வேறு.
விலாசம் :—கலாநிலயம்: 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.



# மானத சாத்திரம்

## [PSYCHOLOGY]

[489-வது பக்கத் தொடர்ச்சி]

### நடத்தை (Behaviour).

பழக்கம்:—அறிவுச்செய லனைத்தும், நமது புதுநிலைக்குப் பொருத்தமென ஆராய்ந்து பழகிய செயல்களேயாம் எனக்கண்டோம். எனவே, ஒருவகையால் நோக்குமிடத்துப் பழக்கச்செயலெல்லாம் அறிவுச் செயலே யாம். இயற்கைச்செயல் பழக்கமின்றியே இயற்கையில் அமைந்துகிடத்தலின் பழக்கச்செயல் அன்று. ஆனுல், இயற்கைச்செயலும் அறிவுச்செயலும் ஒன்றுக இயைந்துகிடத்தலின் அவற்றை வேறு பிரித்தறிவது அருமையினும் அருமை.கோழிக்குஞ்சு நெல் முதலியவற்றை அலகால் குத்தி யெடுப்பது இயற்கைச்செயலே யாகும். ஆனுல் சில நாளிற்குள் கல்லைக்குத்தாது நெல்லைமட்டும் குத்தி எடுக்கின்றது. இது பழக்கத்தின் பயன். பழகப்பழக ஒரு செயல் திருத்தமுறுகின்றது; நிலைபே றடைகின்றது. முதன்முறை, கோழி குத்தும்போது குறிதவறிப் போகும். பழகப்பழகக் குறிதவருது குத்துவதைக் காண்க. இவ்வாறு நிலைபேறு அடைவதோடு, இயற்கையில் இயைபுபெற்று விளங்காத இரண்டுசெயல்கள் பழக்கத்தால் இயைபு பெறுகின்றன. மணியோசைக்கும் நாவில் நீர் ஊறுவதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. ஆனுல் உணவுப்பொருளை வாயிலிட்டதும் நாவில் நீர் ஊறுகின்றது. வாயிலிடவும் வேண்டுமோ? பழக்கத்தால் மாங்கனியைக் கண்டதும் நீர் ஊறவில்லையா? மாங்கனியை உண்ணும்போதெல்லாம் மணியடிக்குமானுல் இவ்விரு உணர்வும் இயைந்துவிடுகின்றன. அதனுல் மணியோசை கேட்டபோதும் நாவில் நீரூறுகின்றது. இயைபுபெருதவை இவ்வாறு இயைபுபெறுவதுபோல், இயைபுபெற்று விளங்குகின்றவைகளும் இயைபுநீங்கி வேறுவேருகத் தோன்றலாகின்றன. சம்மட்டியால் உலைக்களத்தில் இரும்பைவைத்து அடித்தால் முதல்முதலில் அவ்வோசை கேட்டதும் திடுக்கிடுகின்றோம். பேரோசை கேட்பதும் திடுக்கிடுதலும் இயற்கையில் இயைந்து விளங்குகின்றன. ஆனுல் காலைமுதல் மாலைவரையில் அவ் வுலைக்களத்தில் உலவும் இருப்புக்கம்மியனே அவ்வோசையைக் கேட்டுத் திடுக்கிடுவதில்லை. அவ்வோசை கேட்டற்கும் திடுக்கிடுவதற்கும் உள்ள இயைபு, பழக்கத்தால் நீங்கிவிடுகின்றது. இங்ஙனம் பல ஊன்றல்களும் எதிரூன்றல்களும் ஒன்றுய்இயைவதும் வேறுபிரிவதும் அல்லாமல்,தொடர்ச்சியாய்ப் பலசெயல்கள் பழக்கத்தின் பயனுக ஒன்றுகவும் நிகழ்கின்றன. நேர்நிலைஈாழி (Bicycle)விடப் பழகியவனுடைய கையும் காலும் உடலும் கண்ணும் எத்துணைசெயல்களை ஒரேபொழுதில் ஒருமித்துச் செய்கின்றன. பழக்கத்தின் பயனை இவ்வாறு சுருங்கக் கூறலாம்.

உடன்நிலை மடக்கு:—குழந்தை 'சுறுசுறு' என்ற ஒலியோடு எரிந்து தீப்பொறிகளை மலர்போலச் சிந்தும் ஒரு மத்தாப்புக் குச்சியினைப் பற்றவைக்கின்றுன். அக் குச்சியைத் தக்கவழியிற் பிடிக்க அறியாது தன் கைமேலேயே தீப்பொறிகளைச் சிந்திக்கொள்கிறுன். இவ்வாறு இரண்டுமுறை சுடப்பட்டபோதெல்லாம் 'சுறுசுறு' என்ற ஒலியும் உடன் கேட்கின்றது. பின்னர் அருகே மற்றொரு குழந்தை "சுறுசுறு" குச்சியைக் கொளுத்துகிறது. தீப்பொறி தன்மேல் வீழாதபோதும், அச் " சுறுசுறு " என்ற ஒலியினைக் கேட்டதும் கையைப் பின்னுக்கு இழுக்கின்றுன் வெட்டோ சூடோ படுமானுல் கையைப் பின்னுக்கு வலிப்பது இயற்கையாகும். அங்ஙனம் செய்தாலன்றே தீங்கின்றித் தப்பிப் பிழைக்கலாம். ஆதலின், சுடுதலே இயற்கைத்தூண்ட லாகும், அல்லது முதனிலைத் தூண்டலாகும். அதற்கேற்ற இயற்கைத் துலக்கம் கையைப் பின்னுக்கு வலித்தலாகும். ஆனுல் சுடுதல் இல்லாதபோதும் 'சுறுசுறு' என்ற ஒலி கேட்டுக் கையைப் பின்னுக்குக் கொண்டுபோதல் இயற்கைத் தூண்டல் அன்று. அக்குழந்தை பலமுறையும் சுறுசுறு என்ற ஒலியோடு சுடுதலையும் ஒன்றுகத் துய்த்துணர்ந்ததால், ஒலியுணர்வும் சூட்டுணர்வும் அதன் மனஅமைப்பில் ஒன்றுகிவிட்டன; விடவே சூடின்றி அவ்வொலியே கையைப் பின்னுக்குஇழுக்கும் செயலைத் தூண்டுகிறது. ஆகவே இந்நிலையில் 'சுறுசுறு' என்ற ஒலி செயற்கைத்தூண்டலாகும். இயற்கைத் தூண்டலாகிய சூடோடு முதலில் உடன்நின்று இது காணப்பட்டதாதலின் உடன்நிலைத் தூண்டல் எனவும் இதனை வழங்கலாம். ஊன்றலும் எதிரூன்றலுமாக இயைந்த செயலனைத்தையும் மடக்கென்றே கூறுவர் நடத்தைக் கொள்கையினர். ஆனுல் சுட்டதும் கையெடுத்தலை இயற்கைமடங்கு (Un-Conditioned Reflex) என்பர்; ஒலிகேட்டுக் கையெடுத்தலைப் பழக்கமடக்கு, அல்லது செயற்கைமடக்கு, அல்லது உடன்நிலைமடக்கு என்பர். உடன்நிலைத் தூண்டல் அல்லது உடன்நிலைஊன்றல் இருப்பதுபோல உடன்நிலைத் துலக்கம் அல்லது உடன்நிலை எதிர்ஊன்றலும் உண்டு. அழகிய வெள்ளை நாய் ஒன்றைக் குழந்தை பார்க்கிறது. அதனைத் தொட்டுத்தொட்டுச் சிரிக்கிறது. எந்தப் பொருளைக் கண்டாலும் உடனே தொட்டுப்பார்ப்பது குழந்தையின் இயற்கை. இரண்டுநாள் சென்றபின் அக்குழந்தை அந்தநாயைக் கண்டதும் கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு அலறுகிறது. ஏன் இது? முதல்நாள் தொட்டபோது அந்த நாய் குழந்தையைக் கடித்துவிட்டது. கடியோ வெட்டோ சூடோ பட்டால் பின்வாங்குவதும் இயற்கைச்செயலன்றே? நாய்க்காட்சியும் நாய்க்கடியும் அதன் மனதிலே ஒன்றுக இயைந்துவிட்டன. நாய்க்காட்சியோ ஓர் இயற்கைத்தூண்டல் அல்லது முதனிலைஊன்றல். அதற்கேற்ற முதனிலை எதிரூன்றல் அதனைத் தொடுதலேயாம். கடிபட்ட பழக்கத்தால் பின்வாங்குதலோ நாய்க்காட்சிக்கேற்ற இயற்கைத்துலக்க மன்று. நாய்க்காட்சியோடு உடன்எழுந்த கடியுணர்விற்கு ஏற்ற எதிரூன்ற லாதலின், "பின்வாங்குதல்" உடன்நிலை எதிரூன்ற லாகும்.

இதுவரை இங்குக் கூறியவை நாமே இயக்கவல்ல வரித்தசை நார்களின் இயக்கமாகும். தாமே இயங்கும் தசைநார்களும் இவ்வாறு பழகுகின்றன. கண்ணிலுள்ள பாவையை இயக்கும் தசைநார், தானே இயங்கும் தசைநார் ஆகும். ஒளிபெருகினால் அப்பாவை தானே குவிகின்றது; ஒளிகுறகினால் அப்பாவை தானே மலர்கின்றது. ஆகவே ஒளிப்பெருக்கமும் ஒளிக்குறைவும் இம்மடக்கில் இயற்கைத்தூண்டல்களாகும்; முதனிலை ஊன்றல்க ளாகும். பாவையின் குவிவும் பாவையின் மலர்ச்சியும் இயற்கைத்துலக்கங்களாகும்; முதனிலை எதிரூன்றல்க ளாகும். ஒரு குழந்தையின் எதிரே மின்மணியோடு கூடிய மின் விளக்கைக் கொண்டுவந்தால் அதன் பாவை குவிகின்றது. பல முறையும் அக்குழந்தையின் எதிரே மணியின் ஒலியோடு விளக்கொளியைக் கொண்டுவந்து விடுவோமானால், பின்னர் ஒளியின்றியே அவ்வொலியைக் கேட்டதும் அதன் பாவை குவியக் காண்கிறோம். இங்கே மணியொலி செயற்கைத்தூண்டலாகும்; உடனிலை எதிரூன்றலாகும்.

தாக்கல்எனும் தூண்டல்வழியாக எழுந்த நரம்புக்கிளர்ச்சி இயக்கநரம்புவழியாகச் சென்று தசைநார்களில் முடிவதுபோலக் கழலைகளும் முடிகின்றன அன்றோ? கழலைகளும் இவ்வாறு பழகுகின்றன. உணவுப்பொருளை வாயில் இட்டதும் நீரூறுகிறது. ஒரு நாய்க்கு உணவு கொடுக்கும்போது அதன் பின்னங்காலைத் தட்டிப்பழகிவந்தனர். நாளடைவில், பின்னங்காலைத் தட்டியதும் அதன் நாவில் நீரூறியது. உணவுப்பொருள் இயற்கைத்தூண்டலாகும்; பின்னங்காலைத் தட்டுதல் செயற்கைத்தூண்டல், அல்லது உடனிலை ஊன்றலாகும்.

இங்ஙனமே மெய்ப்பாடுகளையும் பழக்கி உடனிலையிடல் கூடும், என்பார் நடத்தைக்கொள்கையினர். மெய்ப்பாடென வேறே அவர்கள் ஆராய்வதில்லை. குலையில் தோன்றும் சில வேறுபாடுகளே மெய்ப்பாடு என்பர். இவ்வேறுபாடுகளை மூன்றாகப் பாகுபடுத்தி அச்சம், வெகுளி, காதல் என்ற வழக்கப்பெயரைக் கொண்டு விளக்குகின்றனர். அச்சம் என்று வழங்கும் நிலையில் இயற்கைத்தூண்டல் ஆவது யாது? பேரொலியும் பிடிநெகிழ்ச்சியுமே முதனிலை ஊன்றல்கள். இடிமுதலிய பேரொலி கேட்டு அஞ்சுவது யாருக்கும் இயல்பு. குழந்தையைக் கையில் பிடித்திருந்த பிடியை நெகிழ்த்துக் கீழே விழவிட்டால் நிலைபிறழ்ச்சி யுணர்ந்து அக்குழந்தை அஞ்சுகின்றது. இந்நிலையில் எதிரூன்றலாவது யாது? மூச்சடக்கம், குதித்தல், உடல் தூக்கிப்போடுதல், அழுகை, ஒன்றுக்கும் இரண்டுக்கும் போய்விடுதல், முதலியனவே எதிரூன்றல்களாகும். பேரொலியும் பிடிநெகிழ்ச்சியும் என்ற இரண்டன்றி வேறொரு தூண்டலும், அச்சமென்று வழங்கும் இவ்வெதிரூன்றல்களை எழுப்புவதில்லை. ஆனால் பல பொருள்களைக் கண்டு நாம் அஞ்சுகின்றோமே என்றால், அவ்வச்சம் பழக்கத்தா லாயது. அப்பொருள்கள் செயற்கைத் தூண்டல்களே யன்றி இயற்கைத்தூண்டல்கள் ஆகா. நாயைத் தொட்டுச் சிரித்தகுழந்தை கடியுண்டபின் அதனைக்கண்டு அஞ்சப் பழகியதை முன்னரே குறித்துவைத்தோம். வெகுளி என்று வழங்கப்படுவது யாது? கூப்பாடு போடுதல், உடலை முறுக்கேற்றல், மூச்சுத்தடைபடல், முகஞ்சிவந்து கறுத்தல், குருதியில் கன்னற்குழம்பு மிகுதல், முதலிய செயல்களைத் தான் ஒருங்குசேர்த்து வெகுளிஎன வழங்குகின்றோம் என்பர் நடத்தைக்கொள்கையினர். இவையனைத்தும் இயற்கைஎதிரூன்றல்களே யாகும்; முதனிலைத் துலக்கங்களேயாம். இவற்றை எழுப்பும் இயற்கைத்தூண்டல் யாது? முதனிலைஊன்றல் யாது? உடலை இயங்காதபடி வலிந்துபிடித்து அழுத்தலே இயற்கைத்தூண்ட லாகும்; இவ் வுடலியக்கத் தடையே முதனிலை ஊன்றலாகும். மற்றவை யனைத்தும் இவ்வியக்கத்தடையை நினைப்பூட்டிப் பழக்கத்தால் வெகுளியை எழுப்பும் செயற்கைத்தூண்டல்களாகும்; உடன்நிலை ஊன்றல் களாகும். காதல் என வழங்கப்படுவது யாது? அழுகைநிறுத்தம், முகமலர்ச்சி, கிளுகிளுத்தல், உறுப்புகள் முறுக்கேறல் முதலியனவே இந்நிலையில் எதிரூன்றல்க ளாகும். தோலையோ, கிளுகிளுக்கச் செய்யும் விலா அடிப்புறம் கமுக்கட்டு முதலிய வுறுப்புக்களையோ, தொடுவதாலோ தட்டுதலாலோ வருடுதலாலோ அல்லது தொட்டிலில் இட்டு ஆட்டுவதுபோல அசைப்பதாலே, காலை வருடுவதாலோ முன்கூறிய எதிரூன்றல்கள் பிறக்கின்றனவாம். ஆதலின் வருடுதலும் ஊசலாட்டுதலும் ஆகிய இவையே இயற்கைத்தூண்டல்கள். மற்றவை யனைத்தும் செயற்கைத்தூண்டல்களேயாம். பழக்கத்தால் ஏற்பட்ட உடனிலைஊன்றல்களாகும். அச்சம் வெகுளி காதல் என்று கூறப்பட்டவை ஒன்றுக்கொன்று மாறுபட்டவை யல்ல. ஒரே பொருள் பேரொலிஉண்டாக்கியபொழுது, அச்சத்தையும், அடிவருடியபோது காதலையும், உடலைப் பிடித்து அழுத்தியநிலையில் வெகுளியையும், பிறப்பிக்கும் அன்றோ. பள்ளிச்சிறுவர்கள் தமது கணக்காயனெதிர் அஞ்சியும் வெகுண்டும் அன்புகொண்டும் நிற்கவில்லையா? இவ்வாறு இவை, பலவேறு வகையாகப் பலவேறுநிலையில் ஒன்றாக இயைந்து விளங்குவதால் பலவேறு வகையான மெய்ப்பாட்டுநிலைகளை யுணர்கின்றோமாம்; அவையனைத்தும் பழக்கத்தின் பயனும். நம்முடைய அறிவுவளர்ச்சி யனைத்தும் அன்னோர் கொள்கைப்படி உடனிலைமடக்கின் வளர்ச்சியே யாகும். பொறிகள் வழியாக வெளிப்பொருள் உடலைத் தாக்கியபோது உண்டாகும் நரம்புக்கிளர்ச்சி புலனரப்பம் வழியாகவும், இணைப்புநரப்பம் வழியாகவும், இயக்கநரப்பம் வழியாகவும் சென்று தசைநாரிலோ கழலையிலோ முடியவே, வெளிநிலைக் கேற்றவாறு கழலைச்சாறு ஊறவும் தசைநார் இயங்கவும் உடனிலை மாறி நாம் நிற்கின்றோம். புலனரப்பம், இணைப்புநரப்பம் இயக்கநரப்பம் என்ற இவைகள் கூடியதே இயக்கஅமைப்பு என்று கூறப்படும். நம் செய்கை ஒவ்வொன்றிலும் இத்தகைய இயக்கஅமைப்புக்கள் எத்துணையோ ஒன்றுசேர்ந்து செயலுறுகின்றன. ஆதலின் நம் அறிவுப்பெருக்க மனைத்தும் இவ்வியக்கஅமைப்புக்களின் இயைபுப்பெருக்கமே யாகும் என்பர். பழக்கமனைத்தும் உடன்நிலையிடுதலாக (Conditioning) முடிகின்றது.

இதற்கேற்ப நமது கிழவியும்,

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

என்று அனைத்தையும் பழக்கத்திற்கு ஒப்படைத்துவிட்டாள். நட்பு கொடை என்பனவும் பழக்கத்தின் பயனே என்பர் நடத்தைக் கொள்கையினர். கைப்பழக்கம் நாப் பழக்கம் நடைப்பழக்கம் என்பன உடற்பழக்கமாக அமைதலின் பழங்கத்தை உடற்பழக்கம் என்றும் மனப்பழக்கம் என்றும் ஔவையாரை ஒட்டி நாம் வேறு பிரிக்கலாம். மனப்பழக்கம் என்று வேறுபிரித்த நுட்பம் மக்கேல் போன்ற பேராசிரியர் கொண்டாடுவது ஒன்றாகும். இவ்வாறே இயற்கைச்செயலின் நுண்மையையுமவ் வம்மையார்,

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால்-யாம்பெரிதும்
வல்லோமே என்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லோர்க்கும் ஒவ்வொன் றெளிது

என்று பாராட்டிப் பாடுவது காண்க. எல்லோர்க்கும் எல்லாம் எளிதென்பர்போலும் நடத்தைக்கொள்கையினர்.

நடத்தைக்கொள்கையினரை ஆங்கிலத்தில் Behaviourists என வழங்குவர். அவர்களில் தலைமை பெற்று விளங்குபவர் வாட்சன் Watson என்ற பெரியார். அவர் உடனிலையிடுதலை Conditioning என்றும், இயற்கைத்தூண்டலை Unconditioned Stimulus என்றும், உடனிலைத்தூண்டல் அல்லது செயற்கைத்தூண்டலை Conditioned Stimulus என்றும், அங்ஙனமே இயற்கைத்துலக்கம் இயற்கை எதிரூன்றல் என்பதையும்செயற்கைஎதிரூன்றல் என்பதையும் முறையே Un-conditioned Response என்றும் Conditioned Response, என்றும் உடனிலைமடக்கை Conditioned Reflex என்றும் வழங்குகின்றார் அதுவே ஆங்கிலநூலின் பெரு வழக்காகப் பயின்றுவருதலின் இங்குக் குறிக்க வேண்டுவதாயிற்று.



# தமிழ்ப் பாடம் 127.

[ 489-வது பக்கத் தொடர்ச்சி. ]

18910

## நைடதம்—நளன்தூதுப் படலம்

வடமொழியில் ஸ்ரீ ஹர்ஷகவி யெழுதிய நைஷதம் என்னுஞ் சிறந்த காவியமே தனக்கு முதனூலாக, அரசர்பெருமான் அதிவீரராமபாண்டியன் தமிழிற் பாடிய நைடதமாம் இந்நூல் நளனது திவ்விய சரித்திரத்தைத் தன்னுட்கொண்டு திகழ்கின்றது. இச்சரித்திரமே அமைந்துள்ள புகழேந்திப்புலவரது கருதரிய பொருமைவாய்ந்த வெண்பாக்களை இத் தமிழ்ப்பாடமென்னும் பகுதியின் வாயிலாக முற்றும் முன் கற்றிருக்கின்றோ மாயினும், தேவர்தம் வேண்டுகோளிற் கிணங்கித் தமயந்தியின்பால் நளவேந்தன் மணத்தூது சென்றபாகம் "நளவெண்பா"வில் மிகவுஞ் சுருக்கமாக வரையப்பெற்றிருக்க, அதனை அதிவீரராமபாண்டியன் அகல உரைத்திருப்பதால் இப்படலத்தைப் பாடத்திற்கெடுத்துக் கொள்ளலானோம். ஓசைச்சுவையும் பொருள்நயமும் மிகவுடைய இப்படலம் நைடதத்தினுள் அருமையாய்ப் பாராட்டற்குரியது. பாடமாயோதுவோர்க்குப் பயன்மிக அளிப்பதன்றி ஏனையோர்க்கும் இப்படலம் பெருமகிழ்வளிக்கும் என்பதிலையமில்லை.

———

அன்னமுரை செய்தவெழி லாயிழையை நெஞ்சத்
துன்னியயர் வோடுமுயி ருண்டிலைகொ லென்னக்
கன்னன்மத னைங்கணை கருத்திடை குளிப்ப
மன்னவர்கண் மன்னன்மதி மாழ்கியயர் காலை 1

(உரை):—அன்னம் - தூதுவந்த அன்னப்பறவை, உரைசெய்த - சொன்ன, எழில் - அழகு பொருந்திய, ஆய்இழையை - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களை யணிந்த தமயந்தியை, நெஞ்சத்து - மனதில், உன்னி - நினைத்து, அயர்வோடும் - சோர்வுடன், உயிர் - உயிரானது, உண்டு இலை கொல் என்ன - உண்டோ இல்லையோ என்னும்படி, கன்னல்-கரும்பு வில்லையுடைய, மதன் - மன்மதனுடைய, ஐங்கணை- ஐந்து மலர் அம்புகளும், கருத்திடை - கருத்தினுள், குளிப்ப - தைப்பதால், மன்னவர்கள் மன்னன் - அரசர்க்கு அரசனான நளன், மதிமாழ்கி -அறிவு கலங்கி, அயர்காலை - அயர்ந்திருந்த சமயத்தில்—

குறிப்பு:—மெய்முன் உயிர், உயிர்முன் உயிர், உயிர்முன் மெய், குற்றியலுகரங்களுக்குமுன் உயிர் அல்லது மெய்; ஆகிய இவைகள் புணர்வதற்குரிய விதிகள் இதுவரையில் கூறி முடிந்திருக்கின்றன. இனி, மெய்முன் மெய் வந்து புணர்கின்ற விதிகளைக் கூறுவோம். அதற்கிடையில், இப்பாடங்களின் வழிபற்றித் தமிழைக் கற்றுவருவோர், செய்யுள்தோறும் சொற்கள் புணர்ந்திருக்கும் விதங்களை ஆராய்ந்து இதுகாறும் உரைத்துள இலக்கணவிதிகளைத் தெளிந்துகொள்ளுதல் நல்லபயிற்சியாகும். நாமும்ஆங்காங்குச் சிலசெய்யுள்களுக்கு இவ்விலக்கணம் இயம்பிக் காட்டுவோம்:—

அன்னம்+உரைசெய்த—ம் என்னும் மெய்யிற்கு முன் உகரஉயிர் வந்திருப்பதால், அவ்வுயிர் மெய்யின்மே லேறி 'மு' என்னும் உயிர்மெய் யாகிப் புணர்ந்து, அன்னமுரைசெய்த, என்றாயிற்று (வால் 2, பக்கம் 786)

உரைசெய்த+எழில்—நிலைமொழியிறுதியில் அகர உயிர்நிற்க, வருமொழிமுதலில் உயிர் வந்ததால், வகரஉடன்படுமெய் தோன்ற அம்மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறி (செய்த+வ்+எழில்) 'செய்தவெழில்' என்று புணர்ந்தது (2-769)

எழில்+ஆய்=வருமொழிமுதல் உயிர் நிலைமொழியீற்று மெய்யின்மே லேறி உயிர்மெய்யாகி, 'எழிலாய்' எனப் புணர்ந்தது—(2-586)

ஆய்+இழையை=ஆயிழையை — இழை என்பதோடு ஐஎன்னும் இரண்டாம்வேற்றுமை உருபு, யகரஉடன்படுமெய்பெற்றுப்புணர்ந்தது(2-788)

இழையை + நெஞ்சத்து = இழையைநெஞ்சத்து— உயிரீற்றிற்குமுன் மெல்லினமெய்வா யாதும் விகாரமின்றி இயல்பாய்ப் புணர்ந்தது-(3-91)

நெஞ்சத்து + உன்னி = நெஞ்சத்துன்னி -- குற்றியலுகாரத்திற்குமுன் உயிர்வர, அக்குற்றியலுகாரம் கெட்டு, அது நின்ற மெய்யின்மேல் வருமொழி முதல் உயிர் ஏறியது.—(2-950)

உன்னி + அயர்வோடும் = உன்னியயர்வோடும்-இகர உயிரிற்குமுன் உயிர்வர, யகர உடன்படுமெய் தோன்றியது.

அயர்வு + ஓடும் = அயர்வோடும் — வகரத்தின்மேல் ஏறிய உகரம் நிலைமொழி ஈற்றிலிருக்க, வருமொழிமுதலில் உயிர் வருதலும், அந்த ஈற்று உகரம் (குற்றியலுகரத்தைப்போல்) கெட்டு விடவே, வருமொழிமுதல் உயிர் நின்ற மெய்யின்மேல் ஏறியது.--(2-950)

அயர்வோடும் + உயிர் = அயர்வோடுமுயிர்—உயிர் + உண்டு = உயிருண்டு—நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (2—586,613)

உண்டு + இலை = உண்டிலை—நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் கெட்டு நின்ற மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. (2—950)

இலை + கொல் = இலைகொல்-இல்லை என்பதன் விகாரமாகிய இலை என்பது குறிப்பு வினைமுற்றாகையால், அதன் ஈற்றிலுள்ள உயிரிற்குப்பின் வருமொழி முதலிலுள்ள வல்லினமெய் மிகாமற் புணர்ந்தது.

கொல் + என்ன = கொலென்ன. நிலைமொழி யீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது. கொல் என்பது குறிலொடு சேர்ந்த இரண்டெழுத்துச் சொல்லா யிருப்பதால், ஈற்று மெய் இரண்டாக விரிந்து ஒன்று அப்படியே நிற்க மற்றது வருமொழிமுதல் உயிரை ஏற்றுக் "கொல்லென்ன" என ஆதல்வேண்டுமாயினும் (2—632) செய்யுளில் இங்கு அந்த லகரமெய் விரிந்து கெட்டது என்று கொள்ள வேண்டும்.

என்ன + கன்னல் = என்னக்கன்னல்-'என்ன,' 'என' எனும் அகர ஈற்று இடைச் சொல்லிற்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய் மிகுந்து புணர்ந்தது.

கன்னல் + மதன் = கன்னன்மதன்—நிலைமொழி யீறு வருமொழிமுதல் ஈரிடத்தும் மெய்வந்து புணர்கின்ற விதிகள் இன்னும் கூறப்படவில்லை.

மதன் + ஐங்கணை = மதனைங்கணை—நிலைமொழியீற்று மெய்யின்மேல் வருமொழிமுதல் உயிர் ஏறியது.

ஐந்து + கணை = ஐங்கணை-எண்ணுப்பெயர்கள் புணர்வதற்குரிய சிறப்பு விதிகளை நாம் கூறவில்லை. எனினும் இவை புணர்கின்ற விதங்களை அனைவரும் அநுபவபூர்வமாய் அறிந்திருப்பார்.

கணை + கருத்திடை = கணைகருத்திடை—எழுவாய்த் தொடராதலால், வருமொழிமுதல் வல்லின மெய் மிகாமல், நிலைமொழியீற்று உயிரோடு இயல்பாய்ப் புணர்ந்தது.

கருத்து + இடை = கருத்திடை—நிலைமொழியீற்றுக் குற்றியலுகரம் கெட, வருமொழி இடையென்னும் ஏழனுருபின் முதலிலுள்ள உயிர், குற்றியலுகரங் கெட்டுநின்ற மெய்யின்மேல் ஏறியது.

கருத்திடை + குளிப்ப = கருத்திடை குளிப்ப-இடை என்னும் ஏழாம் வேற்றுமை உருபேற்ற சொற்களுக்குப்பின் வருமொழிமுதல் வல்லினமெய், ஒரு நியதியின்றி மிகுந்தும் மிகாமலும் நூலாசிரியர்களால் புணர்த்தப்படுகிறது. இங்கு மிகவில்லை.

குளிப்ப + மன்னவர்கள் = குளிப்பமன்னவர்கள்-நிலைமொழியீற்று உயிரிற்குப்பின் வருமொழி முதலில் மெல்லினமெய் வந்ததால் அம்மெய் இயல்பாய்ப் புணர்ந்தது.

மன்னவர்கள் + மன்னன் = மன்னவர்கண் மன்னன்; மன்னன் + மதி = மன்னன்மதி — நிலைமொழியீற்றுமெய்வருமொழிமுதல் மெய்யோடு புணர்கின்ற விதிகள் இன்னுங் கூறப்படவில்லை.

மதி + மாழ்கி = மதிமாழ்கி—நிலைமொழியீற்று உயிரோடு வருமொழிமுதல் மெல்லினமெய் இயல்பாகப் புணர்ந்தது.

மாழ்கி + அயர் = மாழ்கியயர்—நிலைமொழி யீற்றில் இகரஉயிர் இருப்பதால் வருமொழிமுத லுயிர் யகர உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்தது.

அயர் + காலை = அயர்காலை — அயர்கின்ற என்னும் பெயரெச்சம் காலம்கரந்து வினைப்பகுதியளவில் அயர் என்று நிலைமொழியாய் நிற்பதால் இத்தொடர் வினைத்தொகை. ஆதலால் வருமொழிமுதல் வல்லினமெய் மிகவில்லை. (3-490)

குறிப்பு:—ஆயிழை, என்பதற்கு ஆய்ந்த ஆபரணம் என்பது பொருள். ஆய்ந்த என்னும் பெயரெச்சம் 'ஆய்' என்னக் காலம்கரந்து நிற்றலால் அது வினைத்தொகை. ஆனால் அதுமாத்திரமன்றி அணிந்தவள், என்பது இறுதியிலும் தொக்கிருத்தலால் இத்தொடர் வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை.

---

பூகமடல் கீறியிள வாளை புனல்காலு
மேகமிசை தாவிடு விதர்ப்பநகர் மன்ன
னுவகையொ டளித்தவுயி ரோவிய நிகர்க்குந்
தோகைமண வோலைகொடு தூதுவ ரடைந்தார். 2

(உரை):—இள வாளை - இளமை பொருந்திய வாளைமீன்கள், பூகம் - பாக்குமரத்தின், மடல் - பாளைகளை, கீறி - கீறிக்கொண்டு, புனல் - நீரை, காலும் - வீசுகின்ற, மேகமிசை - மேகத்தின்மீது, தாவிடும் - தாவுவதற்கிடமான, விதர்ப்பநகர்-விதர்ப்ப நாட்டுத் தலைநகரமாகிய குண்டினபுரத்திற்கு, மன்னன் - மன்னனாகிய வீமராஜன், உவகையொடு - மகிழ்ச்சியோடு, அளித்த - பெற்ற ஒரு, உயிர் ஓவியம் நிகர்க்கும் - உயிருள்ள சித்திரத்திற்கு ஒப்பான, தோகை - தமயந்தியின், மணவோலைகொடு - மணவோலையை எடுத்துக்கொண்டு, தூதுவர் - வீமராஜன் அனுப்பிய தூதர்கள், அடைந்தார் - நளனிடத்தில் வந்து சேர்ந்தனர்.

விரிவுரை:—முன்பாட்டி னிறுதியில் நின்ற 'காலை' என்பதனை, இப்பாட்டினிறுதியிலுள்ள 'அடைந்தார்' என்பதோடு சேர்த்து, "நளன் அயர்ந்திருந்த சமயத்தில் வீமராஜனது தூதர் வந்து சேர்ந்தனர்" என்று பொருளை முடித்துக் கொள்ளவேண்டும். இப்படி ஒரு செய்யுள் அடுத்துவரும் செய்யுளிற்குள்ளும் தொடர்ந்தாலன்றிப் பொருள் முடியஇயலாமல் நிற்குமாயின் அவ்விரு செய்யுள்களையும் குளகம் என்பர்.

ஓவியம் நிகர்க்கும் தோகை, என்பது உவமையணி. ஆனால், வெறும் ஓவியம் என்னாது, உயிருள்ள ஓவியம் ஒன்று உளதாயின் அதனை நிகர்க்கும் தோகை, எனப் பட்டிருக்கின்றது. உயிருள்ள ஓவியமோ எங்கும் இல்லை. இல்லாத வொருபொருளை இருப்பதுபோல் உவமையாகக் கூறியிருத்தலால் இது, இல்பொருள் உவமை ஆகும். (1—309).

தோகை, என்பதற்கு மயிலின்சிறகு என்பது பொருள். அச் சிறகு மயிலின் ஒரு சினை (சினை - உறுப்பு) ஆகும். அச்சினையின் பெயர் அதனையுடைய மயிலிற்கே ஆனது சினையாகுபெயர். மறுபடி, மயிலென்னும் பொருளாய அத் தோகை என்னும்சொல் அந்த மயில்போன்றிருக்குங் காரணத்தால் ஒரு பெண்ணிற்கு ஆகிநிற்றலால் அது உவமை ஆகுபெயர் (1—429). இப்படி இருதரம் பொருள் மாறு தலடைந்து 'தோகை' என்னும் சொல் பெண்ணைக் குறிக்கலாயதால் இது இருமடியாகுபெயர் எனப் படும் (1—610).

குறிப்பு:— மேகமிசை + தாவிடும் = மேகமிசைதாவிடும். இடை என்னும் ஏழாம்வேற்றுமை உருபைப் போல் மிசை என்னும் உருபிற்குப் பின்னும் வல்லினம் மிகுந்தும் மிகாமலும் புணர்கின்றது.

---

முடங்கலின் வரைந்தவுரை முற்றுமுண ராமுன்
தடம்புயம் வளர்ந்தன வரைக்குவமை சாலக்
குடங்கையி னகன்றவிழி கோநகரி செல்வான்
மடங்கலனை யானுள மகிழ்ச்சியொ டெழுந்தான். 3

(உரை)—முடங்கலின் - தூதுவர் கொணர்ந்த ஓலைச்சுருளில், வரைந்த உரை - எழுதியுள்ள சொற்களை, முற்றும் உணராமுன் - முழுவதும் படித்துத் தெரிந்துகொள்வதற் குள்ளேயே, தடம்புயம் - நளனுடைய பெரிய தோள்கள், வரைக்கு - மலைக்கு, உவமைசால - உவமையாகும்படி, வளர்ந்தன - (மகிழ்ச்சியால்)பருத்தன. (உடனே) மடங்கல் அனையான் - சிங்கத்தைப்போன்ற நளன், குடங்கையின் - உள்ளங்கை போன்ற, அகன்ற - அகன்றிருக்கின்ற, விழி - கண்களையுடைய தமயந்தியின், கோநகரி - இராஜநகரத்திற்கு, செல்வான் - போகும்பொருட்டு, உளம் மகிழ்ச்சியொடு - மனக்களிப்புடன், எழுந்தான் - புறப்பட்டான்.

குறிப்பு:—முடங்கல் என்பதற்கு வளைதல் அல்லது சுருளுதல் என்பது பொருள். இத் தொழிலின் பெயர் அத் தொழிலையுடைய ஓலைக்கு ஆயது. மடங்கல் என்றால் திரும்புதல். அது கம்பீரமாகத் திரும்புகின்ற தொழிலையுடைய சிங்கத்திற்குப் பெயராயது. ஆகையால் இவையிரண்டும் தொழிலாகுபெயர்கள்.

விழி, என்பது இங்கு விழிகளையுடைய தமயந்தி என்னும் பொருள் உடையது. விழி என்பது சினைப்பெயர். அச் சினைப்பெயர் அதனை உடைய பொருளுக்கு ஆனதால், இதனைச் சினையாகுபெயர் என்னல் வேண்டும். ஆனல், ஆகுபெயர் என்பது நினைத்தவர் நினைத்தபடி ஆக்கக்கூடியதன்று; தொன்றுதொட்டு அப்பொருளில் வழங்கிவருவதா யிருத்தல் வேண்டும். விழி, இடை, குழல் என்பன போன்ற சினைப்பெயர்களைப் 'பெண்' என்னும் பொருள்பட ஆக்கிய வழக்குக் காண்பதரிது. மற்று 'அகன்றவிழி' என்பதை ஒன்றாகக்கொண்டு, அகன்ற விழிகளை உடையவள் எனப் பொருள்படும் அன்மொழித் தொகை எனக் கொள்வதற்கு மிலக்கணமில்லை. ஏனெனில், அன்மொழித்தொகை ஒரு தொகைநிலைத்தொடரின் புறத்தே பிறத்தல் வேண்டும். 'அகன்றவிழி' என்பதோ தொகாநிலைத்தொடர்களில் ஒன்றாகிய பெயரெச்சத் தொடர். 'அகல்விழி' என நிற்குமாயிற்றான் வினைத்தொகை புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை என இயலும்—(2-455, 471, 491). எவ்வாறாயினும் 'விழி' என்பது இங்கு உயர்திணைப் பொருளில் நிற்பதால், விழி கோநகரி என்பது ஆறும் வேற்றுமைத் தொகையாயினும் வல்லினமெய் மிகவில்லை—(3-370).

குடங்கையின், என்பதிலுள்ள, இன், ஒப்புப்பொருளுடைய ஐந்தாம்வேற்றுமை உருபு. (1-949)

## இலக்கணம்.

இவ்வாண்டு முதலிதழில் பாகுபாடுசெய்து காட்டியிருக்கின்ற புணர்ச்சி வகைகளில், 4வது ஆகிய, நிலைமொழியிறுதி வருமொழிமுதல் ஆகியஈரிடத்தும் மெய்யெழுத்துக்கள் வந்து புணர்வதற்குரிய விதிகளை அடுத்தவாரம்முதல் கற்கப் புகுவோம்.

---

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்— 2. மந்தரை சூழ்ச்சிப் படலம்.

[486வது பக்கத் தொடர்ச்சி]

உள்ளமோ வோருகால் சாயு மறிவுதா னுற்ற லாமே.

வருவதோ கோசலைக்குப் புதியதோர் வாழ்வென வியப்புற்றுநின்ற கைகேசியை நோக்கிய மந்தரை, தன் கூனுடை யாக்கை குலுங்குறநக்கு இருளொடு பொய்யும் பொதிந்த பாழ்வாய் புழுங்கி,

ஆடவர் நகையுற வாண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தையலாள் படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ னளைவாழ் விதெனச் சொல்லினள்.

["புருடர்கள் பரிகசித்து நகைக்கவும், வீரமே பழுதடையவும், தாடகை என்னும் பெயருடைய பெண் சாகும்படி, வளைந்த கட்டமைந்த வில்லுடைய இராமன், நாளைத் தினம் அரசகிரீடத்தைச் சூடிக்கொள்வான். கௌசலைக்கு வரவிருக்கும் வாழ்வு இதுதான்" என்று சொன்னாள்]

“ஆறிநின்ற தறனன் றரக்கியைக் கோறி” என்று அந்தணன் ஏவும்வரை இராமன், இப்பழியுரை பின்னுள் பேசவும் படுமேயெனக் கூசியே அந்நாள் தன் நெடுஞ்சிலையா லம்புதொடாமல் தாழ்ந்திருந்தனன். கூற்றினுங் கொடியகூற்று யுலகினை யுழக்கினளேனும் இன்று கொன்றால் பின்னொருநாள் பெண்ணினில் நல்லபெண்ணுய்த் தன் நண்ணலார் நாவில் வழங்கலாவ ளச் சழக்கியென இராகவன் நெடிதுநோக்கி முன்னரே அஞ்சியது பொய்க்கவில்லை. தாடகையையோர் சுடுசரத்தால் தொலைத்தவச் செய்கையைக் கோசிகமுனியும் துருக்கர்வேந்தனு மல்லால் வேறு யாரும், ஆண்மையெனப் பாராட்ட நேர்ந்ததில்லையாயினும், ஆடவர் ஒருவரும் அத்தொழிலைப் பழித்து நகைத்திலர். “நின் அன்னைதன்னை நல்குந் தாடகையை உயிர்கவர்ந்த சரம்” தன்கை யிருந்ததென்று பின்னுள் இராகவன் சூர்ப்பணகையை அச்சுறுத்தி யகற்றுமாறு விளம்புவானாயினும், அயோமுகியெனு மரக்கியைக் கொல்லாது மூக்கினைக் களைந்துபோக்கிய இளையோனை,

தொல்லிரு டனைக்கொலத் தொடர்கின் றாளையுங்
கொல்லலை நாசியைக் கொய்து நீக்கினாய்
வல்லைநீ மனுமுதன் மரபினோய்

[மிகுந்த இருட்டில் உன்னைக் கொல்வதற்குத் தொடர்ந்த அரக்கியையும் கொல்லாமல் மூக்கினைமாத்திரம் அறுத்தாய். ஆகையால் வல்லவனான நீயே இம் மனுகுலத்திற்கு ஏற்றவனாகின்றாய்]

என்று, சானகியைப் பிரிந்திழந்த துயரினையும் மறந்தனனாய் வியந்துஉவந்தனன் என்னின், பழிச்சொற்கஞ்சியது மாத்திரமேயன்றித் தான் தாடகையைக் கொன்றது பழியே யென்றுகூடக் கழிவிரக்கத்தாலுளைந்தனனென உன்னுத லியலும். பின், பிரம்மாத்திரத்திற் கழிந்துகிடந்த தன் தம்பிமுதல் தானையுள துணைவர்களைநோக்கி,தானுந் தன்கைச் சிலையு மிருக்க நேர்ந்தவா றிதுவோவென நாணிக் கையறுநாள்,

வேலைப் பள்ளக் குண்ட கழிக்கும் விராதற்குங்
காலிற் செல்லுங் காக மணிக்குங் கரனுக்கும்
மூலப் பொத்தற் செத்த மரத்தேழ் முதலுக்கும்
வாலிக் கும்மே யாயின வொருவென் வலியம்மா

என்று, வருணனையும் விராதனையும் காகத்தின் கண்ணையும் மராமரங்களையும் வாலியையும் காய்ந்ததல்லால் தன் வலியாற் கண்ட பயன் பிறிதில்லை என்று தன்னையே வெறுத்துக்கொண்டபோழ்து அதனிடைத் தாடகையைச்சேர்க்காதது இழிவினும் இழிந்ததென்று அச்செயலை நாவினால் இயம்புதற்கும் இசையாத மானத்தால் நேர்ந்திருப்பினு மிருக்கலாம்.

தாடகையைக்கொன்ற வீரம் எத்தன்மைத் தாயினுமாகுக. இராமன் பாணியில் உண்டையை உன்னியுன்னி யவ்வைரசுத்திக் கொரு வழிநாடுவா ளிக்கூனியின் கைக்கு இஃதோர் குறுந்தடி யாயிற்று. “வில்லால் தன்னை யடித்தானாதலின் இவன் வீரனல்லன்” என்றியம்பினாற் பயனில்லை என்பது தெரிந்த மந்தரை இராமனது வில்லிற்கே ஓர் பழி சார்த்தும்பொருட்டு இறந்தகன்ற தாடகையை ஒருபா லுணர்ச்சியால் இங்குத் தன்துணைக் கழைத்துக்கொண்டது வியப்பன்று.

கைகேசிக்கோ, “இராமன் கோமுடி சூடுவன் நாளை” என்ற சொற்களல்லால் வேறெதுவுஞ் செவியிற் சேர்ந்ததில்லை. மற்றுப் புக்கவேனும், பின்வந்த மொழிகளால் கிளர்ந்த ஆர்வந்தான் முன்சென்ற மொழிகளின் வன்மத்தை மறக்கவைத்தன போலும். ஆதலின் தாடகையைக் கொன்றதன் தகுதியை ஆயும் நினைவின்றி,

ஆயபே ரன்பெனு மளக்க ரார்த்தெழத்
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவ ளுவகைபோய் மிகச்சு டர்க்கெலா
நாயக மனையதோர் மாலை நல்கினாள்

[தூயவளாகிய கைகேசி, விளைந்த பெரும் அன்பாகிய கடல் ஒலித்துக்கொண்டெழவும்,தேயாத சந்திரன்போன்ற முகம் ஒளிவீசவும், எல்லைகடந்த மகிழ்ச்சியோடு, சந்திர சூரிய நக்ஷத்திரங்களுக்கெலாம் நாயகம்போன்ற ஒரு இரத்தினமணி மாலையை எடுத்து அந்த மந்தரைக்குப் பரிசிலாக அளித்தாள்]

தன்மகன் பரத னிருக்க மாற்றவள் புதல்வனுக்கு மகுடாபிடேகம் நடைபெறலாவதென்னின், யாதும் அவ்வியமின்றி யிக் கைகேசி உவகை கொண்டதற்கோர் காரணம் முயல்வாராய கம்பர்,

மாற்றமஃ துரைசெய மங்கை யுள்ளமு
மாற்றல்சால் கோசலை யறிவு மொத்தவால்
வேற்றுமை யுற்றிலள் வீரன் றாதைபுக்
கேற்றவ ளிருதயத் திருக்க வேகொலாம்.

[கூனி அவ்வார்த்தைகளைச் சொல்ல—கைகேசியின் உள்ளமும் திறமைமிகுந்த கோசலையி னறிவும் ஒத்திருத்தலால் கைகேசி, இராமனென்றும் பரதனென்றும் வேற்றுமை பாராட்டவில்லை. இவ்வேற்றுமைஉணர்ச்சி எழாவண்ணம் தான் புக்கிருப்பதற்கு ஏற்றவள் என்று இராமன்தந்தை கைகேசியின் இதயத்தில் புக்கிருத்தலாலோ (இவன் உள்ளமும் அவன் அறிவும் ஒத்தன)

என்று ஐயுற்றியம்புகின்ற செய்யுள் சிந்தனை மிக உடைத்து. உள்ளத்தின் இயற்கையாய் அமைந்திருக்கின்றவோர் நிலைக்கும் அறிவினது ஆற்றலால் எய்துகின்ற நிலைக்கும் எத்தகைய வேற்றுமை உளதென்பதை இங்கு நுனித்துக்காட்டுகின்றார் கம்பர். நல்லன இவை அல்லன இவை என்று ஆராய்ந்து தேர்ந்து நல்லதன் நன்மையையும் தீயதன் தீமையையும் தூக்கி, தீதினாற் சிலபோது இன்பநலங்கள் கைகூடலாமென்னும் நினைவினது பொய்ம்மையைக் கலக்கமின்றிக் காண்பதற்குரியது அறிவு. இவ் வறிவுமட்டுமே ஒருவரை நல்லவ ராக்குமென்ற நிச்சயமில்லை. அவ் வறிவாற் கண்ட முடிவைத் தொடர்ந்து ஒழுகுகின்ற வாழ்க்கைய ராலன்றிக் கண்டதும் கேட்டதும் அவலமே யாகிவிடும். நன்மைதீமைகளின் தன்மை யின்னதென்று பிறர்க்குப் போதனைகள் செய்யமட்டுமே நினைப்பார்க்குச் சிறிது அறிவு போதும். மற்று, அந்நன்மையைத் தமதாக்கிக் கொள்ளவோ உள்ளமும் வேண்டும். உணர்விற் குறைவிடம் உள்ளம். அறிவினால் எய்திய முடிவிற் கிணங்க மனமொழி மெய்களை உய்ப்பதற்குரிய கருவியா யிறுதியி லமைவது இவ் வுள்ளத் துணர்வு. உள்ளத்துணர்வு பிறந்ததில்லையேல் மனமொன்று நினைக்க வாயொன்று பேசிச் செய்வதொன்றாய் முடியவே நேரிடும். அறிவினா லெய்திய உண்மை



உள்ளத்தி னுணர்வாக மாறியபின்னரே அது ஒழுக்கத்திற் காதாரமாகின்றது. ஆதலின், அறிவிற்கும் ஒழுக்கத்திற்கும் நேரான தொடர்ச்சி யில்லை. உள்ளமே இடைநின்று அறிவையும் ஒழுக்கத்தையும் தொடர்புபடுத்தல் வேண்டும்.

உண்மை நன்மை என்னுமிவை ஒரே பொருளுடைய இருமொழிகள். நான் நீ, எனது உனது எனும் வேற்றுமையொன்று மில்லாமை உண்மை. இவ்வேற்றுமையின்மைக் கிணங்கி யொழுகல் நன்மை. அறிவின் ஆராய்ச்சியால் எய்திய வுண்மை, உணர்வினாலன்றி நன்மையாகும்படி மாறுவதில்லை. எனினும், அறிவினாலாய்ந்து தெருளாதார் திறத்தும், நன்மையை நாடுகின்றவோர் உணர்ச்சி உள்ளத்தின்பால் எந்நாளும் இயற்கையாகவே உளது. எனின், அறிவினாற் சோதித்துச்சோதித்து நிகிலப்பொருள்கள் அனைத்தும் ஒன்றேயென்று தேர்ந்து, இடையிடையே குறுக்கிடும் வேற்றுமைநினைவை முதுகிடவென்று, தனதென்றும் பிறரதென்றும் பிரிவுபடப் பாராட்டாமல் உள்ளத்தின் உதவிகொண்டு ஒழுக வேண்டியவர் ஒருசாரார். இயற்கையாயமைந்த உள்ளத்தின் தூய்மை கெடுதலின்றி வாழ்வதற்குரிய சாதனங்கள் வாய்த்திருப்பதால், ஒற்றுமை அறிவினையெய்துதற்கியன்ற ஆராய்ச்சி பயிற்சி முதலிய உதவிகள் இன்றியேயும், உணர்வொன்றே உய்த்திட வேற்றுமைநினைவே எழாமல் நல்லவர்களா யொழுகுவார் வேறொருசாரார். முன்னினத்தைச் சேர்ந்தவள் கோசலை; பின் னினத்தவள் கைகேசி. இவ்விருவர்தம் வாழ்க்கையொழுக்கமும் ஒருபடித்தா யிருக்கின்றது. “இராமன் நாளை கோமுடி சூடுவன்” எனக் கேட்ட கைகேசி, ‘தன்மகன் பரதனுக் கில்லையே’ என்ற வேற்றுமையொன்றும் பாராட்டாமல் மகிழ்ந்ததுபோன்றேபின், “பரதனே துங்க மாமுடி சூடுகின்றான்” எனக்கேட்ட கோசலையும் “இராமனுக் கில்லையே அரசு” என்று ஏங்காமல், “நும்பிக்கு நானிலம் நீ கொடுத்து ஒன்றி வாழுதி” என இராமனை உவகையுடன் பணித்தனள். இவ்விருவரும் ஒரே நிலைவந் துற்றபோது ஒழுகியமுறையும் ஒன்றேயாயினும், அவ்வொழுக்கத்திற் காதாரமாயிருந்த தெதுவென ஆயுமிடத்து அதுதான் வேறுவேறாகுமென்று கம்பர் வற்புறுத்துகின்றனர். இருவரும், தன் மைந்தன் மாற்றவள்மைந்தன் என்றவோர் ஓரம்புக்குத் தம் மனத்திடை யுழக்கப்பெற்றிலர். ஏனெனில், கைகேசியின் உள்ளமும் கோசலையின் அறிவும் தம்மில் ஒத்தன. கோசலை, இயற்கையா யமைந்த தன் னுள்ளத்தின் நல்லுணர்வினோடு அறிவினாலும் ஆராய்ந்து வேற்றுமை யின்றெனக்கண்டு அதன்படி ஒழுகிய ஆற்றலுடையவள். அறிவினது உதவி யாதுமின்றியும் வேற்றுமையற்ற ஒழுக்கமுடையவள் கைகேசி. எனினும், யாவர்மாட்டும் ஒத்த அன்புடையரா யமைதல் இவ்விருவருக்கும் கைவரலாயிற்று. இன்னபடி உள்ளத்துணர்வின் இயற்கையினால் ஒற்றுமைக் காட்சியு மொழுக்கமு முடையவள் கைகேசி என்பதைக் குறிப்பதற்குக் கம்பர், “வேற்றுமை உற்றிலள்” எனச் செப்புகின்றார். கோசலையோ, “மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்” எனப் பிரித்துக் காட்டுவார். இதனால், கைகேசியைக்காட்டிலும் கோசலை குணத்தால் குறைந்தவளென்றேனும், வந்துவந்து உறுத்துகின்ற வேற்றுமையை வலிந்து மாற்றிக்கொள்வதேயன்றி இயற்கையுணர்வு இவளுக் கிலதென்றேனுங் கொள்ளலாகாது. கைகேசி வேற்றுமை யென்பது ஒன்று இருக்கஇயலும் என்பதே ஒருநாளும் தெரிந்துகொள்ளாதவள். கோசலை, வேற்றுமைகொள்ளலென்னும் குண மின்னதென்று தெரிந்திருந்தும் அந் நினைவைத் தன் அறிவின் ஆற்றலால் வென்றகற்றி ஒற்றுமை உண்மையை அன்பின துருவமாக ஓர்ந்து அமைத்துக்கொண்டவள். போர்முறையில், “கல்லா மறம்” வியந்து பாராட்டுதற் குரியதேனும், சிலையின் கல்வியும் கருவித்தொழில்களும் பயின்றுள ஆற்றலே காரியவளவில் உயர்ந்ததாவதுபோல், கைகேசியின் உணர்வெனத் தோன்றிய கல்லா அறம் அவளது உள்ளத்தின் தூய்மையை நலமுறவிளக்க, கற்றுப் பயின்று தேர்ந்த கோசலையின் நிலையே உயர்ந்ததாகின்றது. உள்ளத்தால் நல்லவளாகின்றாள் கைகேயி; அறிவின் ஆற்றலால் வேற்றுமை மாற்றிய சான்றவள் கோசலை. இவ்வண்ணம், “வேற்றுமை உற்றிலள்”, “வேற்றுமை மாற்றினாள்’ என வகுத்து, சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்திய கம்பர்பிரான், தன் சொன்னயச் சிறப்பைக் காட்டுகின்ற கருத்து மட்டுமே உடையா ரலர். கதையின் நிகழ்ச்சிக்கு இவ் வேற்றுமை இன்றியமையாத தாகின்றது. புறத்தினின்று யாதும் ஏற்றுதல் இல்லாதவரை, கல்லாது நின்ற உள்ளத்துணர்வு தங்குகின்றதேனும், அன்னதற்கு ஆற்றரிய இடையூறொன்று வந்தெய்தியதெனின் தலைநிற்க வியலாமல் தடுமாற்றம் எய்திவிடும். மற்று, அறிவினால் உரம்பெற்றதோர் உண்மையை உள்ளவாறு உய்த்து உணர்வினொடு கலந்தக்கால், சூறாவளி வைகிய சூழலினும் அம்மனத்தின் துணிவு நாலலும் நடுங்கலுமின்றிப் பெருவரையென நிற்கலாகும். நாழி ஒன்றிரண்டு கழியுமுன், வேற்றுமையுற்றிலா வவள், கூனியெனும் இவ்வொருகயத்தி நவின்றவவ் வற்பநயப்புரைக்கு நனிநெகிழ்ந்து வேற்றுமையே யன்றி வெங்கண்வன்மமும் பேரவாவும் பிறர் துயர்க்கிரங்காப் பேயின்கொடுமையும் பெற்றவளாயினாள். மற்று வேற்றுமைமாற்றிய கோசலையின் ஆற்றலோ அசையாது நின்றது. பரதனுக்கு ஆகுக பட்டம்என்றசொல்லினை அவள் மாற்றினாள் அல்லள்: அஃதவளுரைக்குங்கால் இராமன் வனம்புக நின்றனன் என்பதறியாள். அறிந்த பின்னும் முன்மொழிந்த அன்பினில் பரதன்பால் பிறழ்ந்திலள். எத்துணையெத்துணை நினைந்துருகி மாழ்கினும் இராமனைப் பிரிதற்கவள் ஆற்றாமல் அழுங்கினவே யவையன்றி அவனுக்கல்லால் பரதனுக்கா சாயதென்னும் குறை அவளுக்கோ அணுவளவும் இருந்ததில்லை. இராமனை யல்லாமல், யாதோ காரணத்தால் வேந்தன் பரதனைத்தான் வனத்திற்குப் போக்கியிருப்பானேனும், கோசலையின் ஆற்றாமை ஒரு சிறிதும் குறைந்ததா யமைந்திரா தென்பதுதிண்ணம். எனின், வேற்றுமை யுற்றிலாதவள் மிக எளிதில் மனம் மாறியதும், வேற்றுமை மாற்றினவள் கடக்கரும் ஒரு நிலை வந்துற்ற காலத்தும் மாறாதிருந்ததுமாய புணர்ப்பினை ஈண்டுக் காண்கின்றோம். மங்கை கைகேசியும் தூயவுள்ளத்தளாயிருப்பதோடு அமையாது முதற்றேவிபோல் அறிவினாற் சான்ற அன்பினது ஆற்றலும்உடையளாய் இருந்திருப்பாளாயின் கூனியின்ஆட்டம் குறையில் ஒடிந்து கதையும் இதனோடு நின்றுவிடல்வேண்டும்.

# குறுந்தொகை

[465-வது பக்கத் தொடர்ச்சி]

ஔவையார்] 91 [மருதம்

*தலைமகன் பரத்தையிற் பிரிந்தானாக, ஆற்றாத தலைவி தன்னிலையை நினைத் திரங்கினளாய்த் தன்னையே முன்னிலைப்படுத்தி நொந்து உரைத்தது.*

அரிப்பவர் பாம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீ ரிலஞ்சிக் கெண்டை கதூஉந்
தண்டுறை யூரன் பெண்டினை யாயிற்
பலவா குகநின் னெஞ்சிற் படரே
ஓவா தீயு மாரி வண்கைக்
கடும்பகட் டியானை நெடுந்தே ரஞ்சிக்
கொன்முனை யிரவூர் போலச்
சிலவா குகநீ துஞ்சு நாளே.

(உரை). வெள்ளரிக்கொடியில் காய்த்த பாம்பைப்போல வரியமைந்த மேன்தோலையுடைய கனியை, ஆழமான நீரையுடைய மடுவிலுள்ள கெண்டைமீன்கள் பற்றி உண்பதற்கிடமான குளிர்ந்த துறையையுடைய ஊரனுக்கு மனைவியா யிருக்கின்றாய். ஆதலின், உன் நெஞ்சினிடத்தில் துன்பகரமான எண்ணங்களோ பலவாகும்; நீ தூங்குகின்ற நாட்களோ, இடைவிடாது கொடுக்கும் மழைபோன்ற வண்மையுடைய கைகளையும், கடிய ஆண்யானையையும், உயர்ந்த தேரையும் உடைய அஞ்சி என்பவனது அச்சத்தைத் தருகின்ற போர்முனையில் இரவின்கண் அகப்பட்ட ஊரார் துயிலும் நாட்களைப்போலச் சிலவே யாகும்.

"பவரில் விளைகனியைக் கெண்டைகதூஉம் ஊரனுக்குப் பெண்டினையாயின் நின்படர் பலவாகுக, நீ துஞ்சும் நாள் சில ஆகுக" எனக் கூட்டிக்கொள்க.

பவர் - கொடி. பெண்டினை—இன், ஐ இரண்டும் சாரியை, பெண்டு - மனைவி. பெண்டு ஆயின் —மனைவியாக இருத்தலால். அஞ்சி - கடையெழு வள்ளல்களில் ஒருவனான அதிகமான் நெடுமானஞ்சி.

துயரமிகுதியிலும் களிப்பு மிகுதியிலும் தம்மைத்தாமே முன்னிலைப்படுத்தி உரைத்தல் மாந்தரியல்பு. அன்றி, இதனைத் தலைவியின் துயரைக்கண்ட தோழியின் கூற்றாக்கி, "நீ ஊரன் மனைவியாயினாய். அதனால் இத்துன்பம் நினக்கு நேர்ந்தது. இதனை நீ நெடுநாள் அநுபவித்துத்தான் தீர வேண்டிய தாயிற்றே, என்செய்கோ" என்று வருந்தியதாகவுங் கொள்ளலாம்.

இறைச்சி:—கொடியிற் காய்த்த கனியை இலஞ்சியிலுள்ள கெண்டை உண்ணும் ஊரன் என்றது, மனையின்கண் வாழும் தலைவனைச் சேரிப்பரத்தையர் தம்வசப்படுத்தியதைக் குறிப்பாலுணர்த்தியது.

தாமோதரனார்] 92 [பாலை

*வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிந்த தலைமகனது பிரிவை ஆற்றாத தலைமகள் மாலைப்பொழுதில் இரங்கிக் கூறியது.*

ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்
தளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுற வோங்கிய நெறியயன் மராஅத்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண் டமையின் விரையுமாற் செலவே.

(உரை). தங்குதற்கு உரியதாய் உயர்ந்து வழியின் பக்கத்தில் உள்ள மராமரத்தில் இருக்கும் குஞ்சுகளின் வாய்க்குள் செருகுதற்கு, இரையை (தம் அலகில்) கவ்விக்கொண்டிருப்பதால், வளைந்த சிறகுகளையுடைய பறவைகள் (அந்தி) வானத்தில் விரைந்து செல்கின்றன; (ஆதலின்) அவை நம்மால் அளிக்கப்படத்தக்கனவே.

அள்ளூர் நன்முல்லையார்] 93 [மருதம்

*பரத்தையிற் பிரிந்து மீண்ட தலைமகனை ஏற்றுக்கொள்ளுமாறு தலைமகளை வேண்டிநின்ற தோழி அவளைநோக்கி, "அவரை நீ ஏற்றுக் கூடிவாழாயாயின் உன்சிறப்பும் அழகும் அழியும். இவ்வாறு நீ நெடிது புலத்தல் தகாது" என்று வற்புறுத்த, தலைவி "நான் அவரை ஏற்கமாட்டேன்" என்று மறுத்து உரைத்தது.*

நன்னலந் தொலைய நலமிகச் சாஅய்
இன்னுயிர் கழியினு முரையல்; அவர்நமக்
கன்னையு மத்தனு மல்லரோ?
புலவிய தெவனோ வன்பிலங் கடையே.

(உரை) சிறந்த என் நற்குணங்கள் அழிந்து அழகும் மிகக்கெட்டு என்னுடைய உயிரே நீங்குவதாயினும் ஆகுக; நீ இவ்வாறு கூறாதே. நமக்கு அவர் தாயும் தந்தையும் போன்றவ ரல்லரோ. அன்பில்லாத விடத்துப் புலத்தலால் யாது பயன்?

" அன்பிலங் கடையே " என்பதற்கு, "எனக்கு அவர் மாட்டு அன்பில்லாக்கால்" என்றும், "அவருக்கு என்மாட்டு அன்பில்லாக்கால்" என்றும் இருவகையாகவும் பொருள் கொள்ளலாம். முந்திய உரைக்கு "அன்பில்லாதவழிப் புலத்தலாற் பயன் இல்லை. அவரை நான் முற்றிலும் மறந்து விட்டேன்; ஆதலின் நானிப்பொழுது புலந்துவருந்துவதாக எண்ணாதே" எனத் தலைவி தன் துனியின் மிகுதியால் உரைத்ததாகவும்; பிந்திய உரைக்கு "அவருக்கோ என்னிடத்தில் அன்பில்லை. அன்புடைய நாயகர்தாம் தம் மனைவியரது புலவியைப் பொருட்படுத்தி அதனை உணர்த்தி இன்பஞ் செய்வார்; ஆதலால், யான் புலந்திருப்பதால் யாது பயன் ?" என்று தலைவி இரங்கியதாகவுங் கொள்க.

அன்பிலங்கடை—அன்பு இல் அம் கடை. அம் சாரியை. கடை ஏழனுருபு. அன்பில்கடை—அன்பு இல்லாதவிடத்து.

கந்தக்கண்ணனார்] 94 [முல்லை

*தான் மீள்வதாகத் தலைமகன் குறித்துச்சென்ற கார்ப்பருவம் வரக்கண்ட தலைவி ஆற்றாளாக, அவளைத் தேற்றலுற்ற தோழிக்கு, "யான் ஆற்றுவேன், அவர்தான் ஆற்றுதலரி தென்று கவல்கின்றேன்" எனத் தலைவி கூறியது.*

பெருந்தண் மாரிப் பேதைப் பித்திகத்
தரும்பே முன்னு மிகச்சிவந் தனவே;
யானே மருள்வேன், றோழி; பானாள்
இன்னுந் தமியர்; கேட்பிற் பெயர்த்து
மென்னா குவர்கொல் பிரிந்திசி னோரே
யருவி மாமலைத் தத்த
கருவி மாமழை சிலைதருங் குரலே.

(உரை)—தோழி! பெருங் குளிர்ச்சிபொருந்திய மாரிக்காலத்துப் பூப்பனவாகிய பேதையாகிய பித்திகத்தின் அரும்புகள் முன்னிலும் அதிகமாகச் சிவந்தன. இப்பொழுதோ நடுராத்திரி; அவரோ தனியா யிருக்கின்றார். இதன்மேல், அருவியையுடைய பெரிய மலையின்மீது தக்க தொகுதியான பெரியமேகங்கள் இடிக்கும் ஒலியையும் கேட்பாராயின் பிரிந்திருக்குமவர் பின்னும் என்னாவாரோ. (அதை நினைத்தே நான் கவல்கின்றேன் அல்லாது) நானே (ஆற்றாது) மயங்குவேனோ? (மயங்குவேன் அல்லேன்)

பித்திகம்—செண்பகம். பானாள்—பால்+நாள்; பாதி இரவு, அல்லது யாமம். கருவி-தொகுதி. சிலைத்தல்=ஒலித்தல். பிரிந்திசின்—இசின், அசை. மாமலைத் தக்க கருவிமாமழை, என்பதற்கு, பெரிய மலையின் வளத்திற்குத் தகுந்த காரணமாகிய மேகங்கள் என்றும் பொருள்கொள்ளலாம்.

கபிலர்] 95 [குறிஞ்சி

*இடந்தலைப்பாட்டுப் புணர்ச்சிநிகழ்ந்தபின் காமநோயால் வாடிவருந்திய தலைமகனைக் கண்ணுற்று அதன் காரணம் யாதென்று வினவிய பாங்கனுக்குத் தலைமகன் உற்றதுரைப்பானாய்க் கூறியது.*

மால்வரை யிழிதருந் தூவெள் ளருவி
கன்முகை ததும்பும் பன்மலர்ச் சாரற்
சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீரோ ரன்ன சாயல்
தீயோ ரன்னவென் னுரனவித் தன்றே.

(உரை). பெரிய மலையிலிருந்து இறங்கும் தூய வெண்மையான அருவிகள் குகைகளில் பாய்ந்து நிறைவதும், பலவகை மலர்களை யுடையதுமான சாரலில், தாழ்ந்த குடிப்பிறப்பையுடைய குறவனது பெரிய தோள்களையுடைய சிறிய மகளினது சாயலாகிய நீர் எனது வலிமையாகிய தீயை அவித்தது.

கன்முகை - மலைக்குகை. நீரோர், தீயோர், என்பனவற்றிலுள்ள, ஓர் என்பது அசை. அவித்தன்று - அவித்தது.



## மதிப்புரை.

கந்தவனநாதர் நான்மணி மாலையும், பதிகமும்.

இவை, யாழ்ப்பாணத்து நாவாலியூர்த் தமிழ்ப்புலவர் திரு. க. சோமசுந்தரம் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டன. விலை 50. சதம். (8 அணா)வேண்டுவோர், "க. சோமசுந்தரம் பிள்ளை, நாவாலி வடக்கு, மானிப்பாய், யாழ்ப்பாணம்,' என்னும் ஆசிரியர் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

வெண்பா கட்டளைக்கலித்துறை ஆசிரியவிருத்தம் ஆசிரியப்பா எனும் நான்கு மணிகளால் தொடுத்த செய்யுள்கள் நாற்பதுகொண்ட இப்பாமாலை, ஓதுவோரிதயங்களுருகி, உலகெல்லா முய்யுமாறு அவதரித்த ஒருதனிக் குமரன் முருகவேள் இணைமல ரடிகளிற் பாய்ந்து தோய்ந்து வைகும்வகை அமைந்திருக்கின்றது. இப்பாட் டுடைத்தலைவர் யாழ்ப்பாணத்துப் பொலிகண்டி என்னு மூரில் கடலருகே கோயில் கொண்டுள கந்தவனநாதர் ஆவர். ஆசிரியர், கந்தவன வரலாற்றை நூன்முகமாய் நற்றமிழ் உரைநடையில் இனிது விளக்கியிருக்கின்றார். சொற்செறிவு பொருட்செறிவுடன் நயமுற நடக்கவல்ல உரைநடைத் தமிழிற்கு இந் நூன்முகம் தக்க சான்றாகின்றது.

நான்மணிமாலையின்பாக்கள் பெரும்பாலும் தோத்திரங்களா யமைந்திருக்கின்றன. உள்ளத் தார்வமும் ஓசையின்பமும் நோக்குங்கால் இவை திருப்புகழ் முதலியவைகளுக்குப் பின்னிடா.

தந்தாவள நின்றானுயர் தண்டாமரை கொண்டான்
சங்கார்கர னென்போர்நுதி தாளாதடந் தோளா
கந்தாநதி மைந்தாநுதி குந்தாகதி தந்தாள்
காரார்மயில் வீராவய லூராவதி சூரா
சந்தார்தமிழ் தந்தாய்மகிழ் தாராய்வினை தீராய்
தாதாகுண நீதாசிவ போதாவருள் தாதா
செந்தூர்நிசர் கொந்தார்பொழில் கந்தாவன நந்துஞ்
சேயேகுரு வாயேமல நோயேசிதைப் பாயே.

என்பதுபோன்ற நீர்மைவாய்ந்த மணிகளால் திகழும் நூல் அருமையாய்ப் பாராட்டற் குரியதென்பதற் கையமில்லை.

அகத்துறைஅளாவிய செய்யுள்களும் சில இடையிடையே வந்துள. தோத்திரப்பாக்களில் காணுமளவு ஆர்வமும் நயமும் இவைகளிற் காணவில்லையெனினும்,

நாளொன்றொன் றாக நடந்தன கந்தவ னத்துக்கந்த
வேளின்றும் வந்திலர் மெய்பசப் பூர விழிமலரும்
வேளொன்றொன் றாகமலர்வாளி தூவும் விரைந்து
புகுந்தாளென் றுரைப்பதற் காளில்லை யென்செய்வ
[னாயிழையே

என்பதனைய செய்யுள்கள் முற்றிலும்இனிமையற்றன வாகா. தாம், "புத்திக்குத் தெரிந்தவகை புகன்றகவி புனைந்தருளைப் புரிய வேண்டும்" என்ற "எத்திக்கும் பரவுகந்த வனத்திருக்கு மிருக்கறியா வெம்பிரானை" ஆராதித்து வழிபடுகின்ற இப்புலவர் அதனால் தாம் கண்ட உண்மை யின்ப நலங்களை ஏனையோரும் கண் டின்புற் றுய்யவேண்டுமென்ற ஆதரத்தினால்,

இலையென் றிரங்கி யிரக்கப் புகுந்து
நிலியொன்றி நீவருந்த வேண்டாம்—அலையொன்றி
மன்னுதுறைக் கந்த வனத்தருகே யாறுமுகப்
பொன்மலையொன் றுண்டங்குப் போ

எனப் பரிவுகூர்ந்து ஏவும் பணியைப் பக்தியுடைய நன்மக்கள் ஆற்றுதற் கவாவுவார் திண்ணம். சென்று அப் பொன்மலையின்பால் பெற விழைவதற்குரியது யாதென்பதை,

ஒலிகடற் புடவி உயிர்த்தொகைக் கருளும்
கலியுக வரதனும் நீயே யாதலின்
மன்னுயிர் வேண்டிய வழங்குவை யாயினும்
துன்னிய விருண்மலத் தொடக்கினு லயர்த்துப்
பிணிநீக் கென்றும் மிடிபோக் கென்றும்
நிதியாக் கென்றும் பகைதாக் கென்றும்
பன்னிரு செவியிலும் படப்பட வாற்றினும்
நின்னுள மியாவது மிரங்கா துன்னடி
எழுமையும் மறவா உழுவ லன்பினை
ஈயென விரக்குமுன் னீன்றசேய்க் கிரங்குந்
தாயினும் விரைந்து தருகுதல் வேண்டும்.

என்னு மடிகளில் அழகாக நினைப்பூட்டியிருத்தலை ஒருவரும் மறத்தலாகாது. எப் பொருளும் இச்சியாது முழுமுதற்கடவுளை உழுவலன்பினில் ஆராதிப்பதைவிட்டு, இம் மண்ணிற்குரிய சில அற்ப இலாபங்களை அவன்பால் வேண்டுவது பேயைத் துணைகொண்டு பெருமானை வழிபடப் பார்க்குமொரு மதியை யொக்கும்.

## வர்த்தமானம்

மோட்டிலால்நேரு கைதியானார்—ஐக்கிய மாகாண அரசாங்கத்தார், காங்கிரஸ் கார்யக்கமிட்டி சட்ட விரோதமானதெனக் கொண்டு, அதன் தலைவரான ஸ்ரீமோத்திலால் நேருவையும், மேற்படி கமிட்டியின் காரியதரிசியான டாக்டர் சையத் முகமத்தையும் கைது செய்துள்ளனர் என்றும் கிரிமினல் திருத்தச் சட்டம் ஐக்கியமாணத்தில் அமுலுக்கு வந்துளதென்றும் தெரிகின்றது. ***

சுதேசப் பொருட்காட்சி·—சென்னைச் சுதேசசங்கத்தார் ஜூலைமாதம் 15-ந் தேதிமுதல் இரண்டுவாரத்திற்குச் சுதேசப் பொருட்காட்சி யொன்றை நடத்த உத்தேசித்திருக்கின்றனர். இது விஷயமாய் விபரம் அறிய விரும்புபவர்கள் சென்னை மகாஜனசபை பொருட்காட்சிக் கமிடிக் காரியதரிசிக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம். இக்காட்சியில் இந்தியர்களுக்குச் சொந்தமானதும் இந்தியர்களால் நிர்வகிக்கப்படுவதுமான கைத்தொழில் பொருள்கள்தான் ஏற்றுக்கொள்ளப்படுமாம் ***

மைசூர்ச் சட்ட சபை:—சென்றவாரத்தில் கூடிய மைசூர்ச் சட்டசபைக் கூட்டத்தில்மதுவிலக்கு விஷயமாக வாதம் நடந்தது. அவ்விஷயமாய் அரசாங்கத்தார் வெளியிட்ட அறிக்கை:— "முழு மதுவிலக்கே அரசாங்கத்தின் நோக்கம். குறிப்பிட்ட வொரு தாலுக்காவில் பரிக்ஷார்த்தமாகப் பூர்ண மதுவிலக்கை அனுஷ்டித்து அதனால் ஏற்படும் பலாபலன்களைக் கண்டறிய முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்." இந்த அறிக்கையின்மேல் மதுவிலக்குவிஷயமான தீர்மானங்கள் வற்புறுத்தப்படவில்லை.

***

வங்காள அரசாங்க அறிக்கை:—வங்காள கவர்ன்மெண்டின் கல்விமந்திரி விடுத்துள்ள அறிக்கை:— "உபாத்தியாயர்கள் மாணவர்களிடத்தில் அதிகச் செல்வாக்குள்ளவர்களாக விருக்க வேண்டும். ஆகவே சாத்தியமான எல்லா வழிகளிலும் மாணவர்களிடத்தில் உபாத்தியாயர்கள் அதிகச் செல்வாக்கை உண்டு பண்ணிக்கொள்ள வேண்டிய அவசியத்தை எல்லாப் பாடசாலைகளின் நிர்வாகிகளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் அறிவிப்பதுடன், மாணவர்களுக்குச் சிரத்தை இருக்கக்கூடிய விஷயங்களில்உபாத்தியாயர்கள் ஈடுபடவேண்டும். அப்பொழுதுதான் ஒருவருக்கொருவர் தொடர்பு நீடிக்கும். பாடசாலை நேரம் தவிர்த்த மற்ற காலங்களிலும் ஆசிரியர் மாணவர்கள் நடத்தையைக் கவனித்துவரவேண்டும். வெளிமனிதர்களின் பழக்கத்தால் மாணவர் கெடாது பார்த்துக் கொள்வதும் பாடசாலையினர் கடமையாகும். அரசாங்க உதவிபெறும் பாடசாலையில் படிப்பவர்கள் அரசியல்கூட்டங்களில் கலந்துகொள்ள லாகாது. பள்ளிக்கூடக்கட்டிடங்களும்அரசியல்வாதம்செய்யும் கூட்டங்களுக்கு உபயோகிக்கப்படலாகா. மாணவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் சம்பந்தம் சரியாயிருக்கிறதா வென்றும் மாணவர்களுடைய ஒழுக்கம் பாதுகாக்கப் படுகிறதாவென்றும் பார்த்தே கிராண்டு கொடுக்கப்படும். ஒழுக்கமில்லாத மாணவனது உபகாரச் சம்பளம் நிறுத்தப்படலாம். அரசியல் துறையில் சம்பந்தமுள்ள மாணவன் தகுந்தபடி தண்டிக்கப்படவேண்டும். இவ்விஷயங்களைக் கவனித்து மாணவர்களை ஒழுக்கத்தில் நடத்திவைக்க வேண்டியது பள்ளிக்கூட நிர்வாகிகளின் கடமை.

# கலா நிலயம்

## 1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :—சேக்கிழார் திறனும் கண்ணப்பர் பக்தியும் விளக்கும் கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை கட்டுரைகள் 18.
4. மலர்வனம், பழமுதிர் சோலை :—சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலைக் கட்டுரைகள் 14.
5. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவியவியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
6. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
7. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
8. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரிடரிக்நிஷேயன், எபிகுயூரன், ஜீனோன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

## 2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கலா நிலயம்:—வறியரோ நாம், உரிமையின் பொய்மை, கட்டளைக்கல், செய்வதிற் சொல்வதே அரிது, அரிசிவிற்க அந்தணன் வேண்டுமாம், புலமைக்குரிய பொய், கலைகளேகதி 6, வள்ளுவர் வாய்மை 6, பாரதி, இராஜா அண்ணாமலை சங்கீத கலாசாலை, சொற்றொடர் ஆரவாரம் 3, கல்சுரைப்பற்றிய கட்டுரை 24 முதலியன ஆகும்.
2. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
3. அப்பர்:—பிறப்பும், இளமையும் யௌவனமும் பல சமயவாராய்ச்சியும், சிவஸ்தல யாத்திரை, அப்பர் பாடல்களும் அவற்றின் சந்தர்ப்பமும், கவிகளின் பகுதிகள், நாடகவியல், அப்பர் கவித்திறம் ஆய கட்டுரைகள் 50
4. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
5. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
6. அகப்பொருள் வரலாறு.—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
7. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
8. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
9. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
10. நம்மாழ்வார் வைபவம் :—நம்மாழ்வார் பாடிய பிரபந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் 12-ல் வந்துள.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

**மேற்கூறிய இரண்டு வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.**

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

| உள்நாடு | ரூ. | அ. | ப. | வெளிநாடு | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|---|---|
| பையிண்டு செய்யாதது | 8 | 0 | 0 | பையிண்டு செய்யாதது | 9 | 8 | 0 |
| காலிகோ கில்ட் | 9 | 8 | 0 | காலிகோ கில்ட் | 11 | 0 | 0 |
| ஆப்லெதர் கில்ட் | 10 | 0 | 0 | ஆப்லெதர் கில்ட் | 11 | 8 | 0 |

:: கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::



# எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

### கம்பராமாயணம்—பாலகாண்டம்

(T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு.)

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில் புதிய முறையில் பதிப்பிக்கப் பெற்றுளது. பதிப்பாசிரியர் பதம்பிரித்தும், தொகைநிலைத் தொடர்களை விரித்தும், அன்வயப்படுத்தியும், அவாய்நிலைகளை வருவித்தும், கவியின் சொற்கொண்டே பொருளை விளக்குகின்றார். அரும் பதவுரையும், விசேடக்குறிப்புகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை. ரூ. 3.

### ஏமாங்கதத் திளவரசன்

(T. N. சேஷாசலம் ஐயர் எழுதியது)

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற்கதை. அன்பின் வன்மையும் வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதமையும், புன்கவிபுகுந்துசெய்யும் துன்மதிச்சூழ்ச்சியும், பொருந்திக்கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன. சம்பாஷணைத்திறமும் சொல்நயச் சுவையும் கருத்தினைக் கவர்கின்றகதையமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்தது இந்நூல். விலை. ரூ. 1.

### முருகன்—ஓர் உழவன்

ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M. A. B. L. ஆங்கிலத்தில் எழுதிய நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரிசெய்த சிறந்தமொழி பெயர்ப்பு. உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின் செல்பவர் தாழ்மையும் செவ்வனே இந்நாவல் நூல் எடுத்துக் காட்டுகின்றது. விலை. ரூ. 1–8.

### திருக்குறள்

(மூலமும் சொற்குறிப்பகராதியும் விஷய ஒப்புக் குறளும்—வா. மார்க்கசகாயம் செட்டியார் பதிப்பு.)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைமாத்திரம் 300 பக்கங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானது. இதனருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக் காட்டுவது சுலபமன்று. விலை. அணா 12.

குலசேகர ஆழ்வார் திருவாய் மலர்ந்தருளிய

### பெருமாள் திருமொழி

மூலமும், பு. பா. இரத்தின சபாபதி நாயக்கர் இயற்றிய பதவுரை, விசேடவுரை இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விருத்தியுரையும் கொண்டது. பிரபந்தத்தின்கண் பயிற்சி இருப்போர்க்கும் பயில முயல்வோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்கவல்லது. காலிகோ ரூ. 1-4. மார்பில் ரூ. 1.

அகத்திய முனிவர் அருளிச்செய்த

### ஆறெழுத்தந்தாதி

முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற் குரியதாய், ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல். பென்ஷன் டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை. அணா 12.

எல்லாப் புத்தகங்களுக்கும் தபால் வி. பி. செலவு வேறு.

கலா நிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை

Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office:-9, Old Court House St., Calcutta.
INDIA'S PROBLEMS CAN ONLY BE SOLVED BY INDIANS
INSURE IN AN INDIAN COMPANY MANAGED BY INDIANS, FOR INDIANS
"NATIONAL" IS THE STRONGEST COMPANY MANAGED PURELY BY INDIANS
"NATIONAL" STANDS FOR INDIAN LIFE ASSURANCE
Low rates of premia. Invested Funds over Rs. 1,47,000,00
Prompt settlement of Claims. Claims paid exceed Rs. 67,000,00
IT WILL PAY YOU TO ENQUIRE ABOUT AGENCY TERMS Please apply tothe Company to-day.
R. G. DAS & Co, Managers. OR K. S. GOPALAYYA Branch Secretary, Loane Square, Broadway, Madras.

ANCIENT JAFFNA
A MOMENTOUS BOOK
BY
Mudaliar C. RASANAYAGAM, C. C. S.
With a ForeWord By
Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.
An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on Epigraphic, Linguistic, Archeo-logical researches, is stated here for the first time in a connected, logical manner from ancient times up to the occupation of the Island by the Europeans.
Every student of History would read this book with pleasure and profit.
Price Rs. 5—8—0. V. P. Charge Extra.
MANAGER:—
KALANILAYAM,
11, VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

## பாரதி

தேசீய மாதத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்:—R. நாராயணசுவாமி

இப்பத்திரிகை திங்கள்தோறும் 80 பக்கங்களுடன் வெளிவருகின்றது. அரசியல் விடுதலையும், சமுக முன்னேற்றமும், இந்திய வியாபாரக் கைத்தொழில் முன்னேற்றமும் இப்பத்திரிகையின் நோக்கமாகும். நல்ல காகிதத்தில் அச்சியற்றப் பெற்றுளது. ஆண் பெண் இருபாலாரும் அறியும் வண்ணம் எளியநடையில் பல அறிஞர்களால் எழுதப்பெற்ற வியாசங்களைக் கொண்டுளது. இப்பொழுது இரண்டாவதாண்டு ஆரம்பித்திருக்கின்றது. இந்தியதேயத்தின் நன்மையிலும் விடுதலையிலும் எவ்வகைத் துறையின் முன்னேற்றத்திலும் ஆர்வம் பிறக்கவும், பிறந்ததை வளர்க்கின்ற ஊக்கம்பெருக்கவும் இப்பத்திரிகை அரியதோர் மருந்தாகும்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாடு | சந்தா | ரூபா | 2 0 0 |
| வெளிநாடு | ,, | ,, | 2 8 0 |
| தனிப்பிரதி விலை | | அணா | 0 4 0 |

விலாசம்:—'பாரதி' காரியாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

## கந்தபுராண வெண்பா

வெண்பாப் புலி வேலுசாமி அவர்களால் பாடப் பெற்றது. தமிழரால் போற்றப்படுவதற் குரியது.

விலை ரூபா 4. தபால் செலவு வேறு.

EDUCATIONAL PUBLISHING CO.
Nungambakam, Madras.

## அமிர்த குண போதினி



5-ம் ஆண்டு பிறந்துள இது போன்ற நவீன தமிழ் மாதச் சஞ்சிகை இதுவரை வெளிவந்ததில்லை விஷயம் யாவும் புதியதாகவும், அற்புதமாகவும் இருக்கும். ஜாதிமத வித்தியாசமின்றிச் சகலரையும் களிக்கச் செய்யும். மாதிரி காபி பார்த்தாலே சந்தா சேர்வீர்கள். 64 பக்கங் கொண்டது. வருடசந்தா ரூ. 1 வெளிநாடு ரூ. 1-4-0 மாதிரி காபி இனாம்.

## ஆங்கில ஆசான்



10-ம் பதிப்பு வெளிவந்துவிட்டது!!

60-நாளில் இங்கிலீஷ் கற்க அப்பியாசபாடங்களுடன் முன் பதிப்புகளை விட அதிகப் பக்கங்களுடன் வெளிவந்துளது. இதுவரை 53100 புத்தகங்கள் செலவாயிருக்கின்றன. வேறு எதாலும் இவ்வளவு சீக்கிரத்தில் கற்க முடியாது. முன்பதிப்புகளை வைத்திருப்பவர்கூட 10-ம்பதிப்பைப் பார்த்தால் கட்டாயம் வாங்குவார். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகை கணக்கும் சேர்ந்துளது. 800-பக்கம். அழகிய சீமைகாலிகோ பைண்டு. விலை ரூ. 2.

எமது லேடி டிரேட்மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

## கம்ப ராமாயணம்.

(மூலமும் உரையும்)

வை. மு. சடகோப ராமானுஜாசாரியார்,
சே. கிருஷ்ணமாசாரியார்,
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் – பதிப்பு.

பாடபேதங்கள் குறிப்பிக்கப் பெற்றுப் பிழையற்ற மூலமும், தெளிவான பதவுரையும், சொல், அணி, யாப்பு முதலிய இலக்கணக் குறிப்புகளும், விசேட விளக்கங்களும் அடங்கி யிருக்கின்றன. உயர்ந்த காகிதம், நல்ல அச்சு, அழகிய கட்டடம்.

| | | | |
|---|---|---|---|
| பால காண்டம் | ... | ரூ. | 5. |
| அயோத்தியா காண்டம் | | ரூ. | 5. |
| ஆரண்ய காண்டம் | ... | ரூ. | 4. |
| கிஷ்கிந்தா காண்டம் | ... | ரூ. | 4-8. |
| சுந்தர காண்டம் | ... | ரூ. | 5. |

(வி பி. செலவு வேறு)

மானேஜர்:—கலா நிலயம்,
11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

## நளாயனி வெண்பா.

திருப்பத்தூர் வர்த்தகரும் முனிசிபல் சேர்மனுமாய
கா. அ. சண்முக முதலியார் அவர்கள் இயற்றியது.

கற்பின்வைப்பெனும் நற்புகழ்வாய்ந்த நளாயினியின் திவ்விய சரித்திரத்தை நேரிசை வெண்பாக்களால் பாடப்பெற்றுள நூல். ஒவ்வொரு செய்யுட்கும் குறிப்புரை முதலியன அவ்வப் பக்கங்களிலேயே அடங்கியிருக்கின்றன. ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், பிரம்மஸ்ரீ ரா. இராகவையங்கார், பிரம்மஸ்ரீ மு. இராகவையங்கார், போன்ற பெரியோர்பலரால் நன்கு பாராட்டப்பெற்றது. அழகிய காகிதத்தில்உயர்தரக் கட்டிடத்தில் அமைந்தது. விலை. ரூ. 1-0-0. (வி. பி. செலவு வேறு).

மானேஜர்:—"கலா நிலயம்",
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)